10.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**


## பனை மரத்தின் சிறப்பு



ஒரு பனை மரத்திலிருந்து ஒரு வருடத்திற்கு பதநீர் 180 லிட்டர், பனை வெல்லம் 25 கிலோ, பனஞ்சீனி 16 கிலோ, தும்பு (மிதியடி பிரஸ் தயாரிக்கப் பயன்படுகிறது) 11.4 கிலோ, ஈக்கு 2.25 கிலோ, விறகு 10 கிலோ, ஓலை 10 கிலோ, நார் 20 கிலோ அளவுக்கு கிடைக்குதுன்னு விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். தென்னை மரத்தோட ஒப்பிட்டா பனை மரத்துலதான் நிறைய பலன் உண்டு. பனங் கருப்பட்டி தான் கிராம மக்களுக்கு ஏற்றது என்று பொருளாதார மேதை தெரிவிக்கிறார். பனங்கருப்பட்டியும் பனங்கற்கண்டும் சாப்பிட்டால் வாத, பித்தம் நீங்கும். பசியைத் தூண்டும். புஷ்டிதரும்னு

ஆயுர்வேத மருத்துவம் தெரிவிக்குது. தொண்டைப்புண், வலி மற்றும் சளி பிரச்னைக்கு பனங்கற்கண்டு பால் நல்ல மருந்தாகும். பஞ்சுமில், நிலக்கரி சுரங்கம் மாதிரியான இடத்துல வேலை செய்பவர்களுக்கும் வாகனம் அதிகமா இருக்குற நகர பகுதியில் குடியிருப்பவர்களுக்கும் நுரையீரல் சம்பந்தமான பிரச்னை இருக்கும். இதைத் தடுக்கக்கூடிய வல்லமை பனங்கருப்பட்டிக்கு உண்டு என்று கண்டுபிடித்துள்ளார்கள்.

## எள் கொம்புப்புழு கட்டுப்பாடு



இந்தப் பூச்சி பீடை தேனி மாவட்டத்தில் எள்ளை மானாவாரி பயிராகப் பயிரிடப்படும் பகுதிகளான கண்டமனூர், கடமலைக்குண்டு, பொன்னம்மாள்பட்டி, வருசநாடு, கூழையனூர், மாணிக்காபுரம், உப்புக்கோட்டை, காமாட்சிபுரம், வயல்பட்டி, எரசக்கநாயக்கனூர், வேப்பம்பட்டி போன்ற இடங்களிலும் மற்றும் தமிழ்நாட்டின் எள் பயிரிடப்படும் எல்லாப் பகுதிகளிலும் இப்பூச்சி பெரும் சவாலாக உள்ளது. இந்த அந்துப்பூச்சியின் புழுக்கள் எள் பயிரைத் தவிர சோயாமொச்சை, கத்தரி போன்ற பயிர்களையும் தாக்கக்கூடியவை. புழுக்கள் இலைகளையும், குருத்துப் பாகங்களையும் உண்டு அதிக அளவில் சேதம் விளைவிக்கும். **பூச்சியின் வாழ்க்கைச் சரிதம்**: பெண் அந்துப்பூச்சி, மஞ்சள் நிற முட்டைகளை தனித்தனியாக இலைகளின் மேல் இடும். வளர்ந்த புழுக்கள் பெரியவைகளாகவும், நல்ல தடிமனாகவும், பச்சை நிறத்திலும், உடலில் மஞ்சள்

நிற சாய்வான கோடுகளுடனும் தென்படும். உடலில் பின் பகுதியில் மேல் புறத்தில் மஞ்சள் நிற, நீண்ட, ஒற்றை மலப்புழைக் கொம்பு நீட்டிக் கொண்டிருக்கும். வளர்ந்த புழு மண்ணுக்கடியில் மண்கூடு கட்டி அதனுள் கூண்டுப்புழுவாக மாறும். அந்துப் பூச்சிகள் மிகப் பெரியவைகளாகவும், பழுப்பு நிறத்திலும், மார்பு பகுதியின் மேல் மண்டை ஓடு போன்ற அடையாளத்துடனும், வயிற்றுப் பகுதியில் ஊதா மற்றும் மஞ்சள் நிற குறுக்குப் பட்டைகளுடனும் தென்படும். இறக்கைகள் பழுப்பு நிறத்தில் இருக்கும். **பூச்சிக் கட்டுப்பாடு:** கோடை உழவு மேற்கொள்வதால் கூண்டுப்புழுவை கட்டுப்படுத்தலாம். பூச்சி எதிர்ப்புத்தன்மையுடைய எள் இரகங்களைத் தேர்வு செய்து விதைக்குப் பயன்படுத்த வேண்டும். புழுக்கள் பெரியவைகளாகவும், எளிதில் கண்டுகொள்ளக் கூடியவைகளாகவும் காணப்படுவதால் அவற்றைப் பிடித்து அழிக்கலாம். டிரைக்கோ கிரம்மா ஆஸ்டிரேலிக்கம் போன்ற முட்டை ஒட்டுண்ணிகள் முட்டைகளைத் தாக்கி அழிக்கக் கூடியவை. மைக்ரோபிளைட்டிஸ், டெட்ராஸ்டைக்கஸ் போன்ற புழு ஒட்டுண்ணிகள், புழுக்களைத் தாக்கி அழிக்கக் கூடியவை. தாக்கப்பட்டி குருத்துப் பாகங்கள் மற்றும் காய்களை சேகரித்து அழித்து விட வேண்டும். தோட்டங்களில் விளக்குப்பொறி வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். புழுக்களின் உடலில் ஊடுருவிப் பாயும் மருந்துகளை பரிந்துரைக்கப்பட்ட அளவு தெளிக்க வேண்டும்.

**- முனைவர் ரா.கோபாலகிருஷ்ணன், பி.கே.முத்துக்குமார், வே.மோகனே, பூச்சியியல் துறை, வேளாண்மைத் தொழில்நுட்பக் கல்லூரி, குள்ளபுரம், தேனி - 625 562.**

சின்ன சின்னச் செய்திகள்



**சூரிய மின்சக்தி பம்பு:** சூரிய மின் சக்தி மூலம் இயங்கும் நீர் இறைக்கும் பம்பு உலகளாவிய வேளாண்மையின் நிலையான வளர்ச்சிக்கு துணை புரிகிறது. இந்த தொழில்நுட்பம் இன்றைய வேளாண்மையின் ஆற்றல் தேவை, கரிம எரிபொருள் பற்றாக்குறைகளை பூர்த்தி செய்கிறது. சூரிய ஆற்றல் மூலம் இயங்கும் சூரியஒளி மின் அழுத்தம். நீர் இறைக்கும் பம்பு அரசின் மின்சார விநியோக மற்ற இடங்களுக்கு மிகவும் சிறந்த சிக்கனமான தொழில்நுட்பம் ஆகும். சூரியமின் சக்தி மூலம் இயக்கப்படும் பம்பு மொத்தம் ஒரு லட்சம் லிட்டர் நீரை 30 அடி ஆழத்திலிருந்து இறைக்க வல்லது. அவ்வாறு இறைக்கப்பட்ட தண்ணீரின் அளவு மேம்பட்ட நீர் விநியோக நுட்பங்கள் மூலம் 5 முதல் 8 ஏக்கர் நிலத்தின் பாசனத் தேவையை பூர்த்தி செய்யும் என கண்டறியப்பட்டுள்ளது. சூரியமின் சக்தி பம்பு என்பது சூரியமின் சக்தி மின் தகடு (PV Module) மின் மாற்றி (Inverter), கண்காணிப்பு கட்டுப்பாட்டுக் கருவி (Charge Controller) மற்றும் நீர் இறைப்பான் (Pump) ஆகியவற்றைக் கொண்டது. சூரியமின் சக்தி பம்பு என்பது மிகவும் சாதாரணமாக உள்ள மோட்டார் பம்புகளைப் போன்றதே ஆகும். சூரியஒளித்தகடு மூலம் உற்பத்தியான நேர் மின்சாரத்தை (DC) எதிர்மின்சாரமாக (AC) மின் மாற்றியின் மூலமாக மாற்றி, சூரிய பம்புகளைப் பயன்படுத்தலாம். சூரியமின் சக்தி உற்பத்தி அளவிற்கேற்ப பம்புகளைப்

பயன்படுத்தி நீர் இறைக்கும் உற்பத்தி திறனை அதிகரிக்கலாம். ஆழ்குழாய் பம்புகள், மிதவை பம்புகள், தரைமட்ட பம்புகள் என மூன்று வகைகளை இடங்களுக்கு தக்க பயன்படுத்தலாம். மேலும் விபரங்களுக்கு: தொடர்பு முகவரி முனைவர் மகேந்திரன், பயிர் ஆற்றல் துறை வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழம், கோயம்புத்தூர் - 641 103. அலைபேசி: 94864 19600.

**தினை இட்லி**

*தேவையான பொருட்கள்:* தினை அரிசி - 3 கப், இட்லி புழுங்கல் அரிசி - 1 கப், உளுந்து - 1 கப், உப்பு - தேவைக்கேற்ப. *செய்முறை:* தினை அரிசி, இட்லி புழுங்கல் அரிசி, உளுந்து இவற்றை 4 மணி நேரம் ஊறவைத்து பின் மாவாக அரைக்கவும். தேவைக்கேற்ப உப்பு சேர்த்துக் கலக்கி 8 மணி நேரம் புளிக்க விடவும். மாவை நன்கு, அடித்துக் கலக்கி இட்லிகளாக ஊற்றி 810 நிமிடம் வேக வைத்தால் தினை இட்லி தயார். தக்காளி சட்னி, மிளகாய் சட்னி, வெங்காய சட்னி தொட்டுக் கொள்ள ஏற்றது. குறிப்பு: தினை அரிசி, இட்லி அரிசி இரண்டும் சம அளவில் சேர்த்து மாவு அரைக்கலாம். விருப்பப்பட்டால் வெந்தயம் 1 தேக்கரண்டி சேர்க்கலாம். தகவல்: கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை - 600 041.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

**தென் மாவட்டங்களில் இன்று கன மழை**



சென்னை:'வங்க கடலின், தென் மேற்கு பகுதியில் நிலை கொண்டிருந்த, காற்று அழுத்த தாழ்வு நிலை, குமரி கடலை நோக்கி நகர்ந்து உள்ளதால், தமிழகத்தின் தென் கடலோர மாவட்டங்களில், இன்று கன மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதுகுறித்து, ஆய்வு மைய இயக்குனர் பாலசந்திரன், நேற்று கூறியதாவது:இரு நாட்களுக்கு முன், வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் உருவான, காற்று அழுத்த தாழ்வு நிலை, நேற்று காலை நிலவரப்படி, குமரி கடலை நோக்கி நகர்ந்து உள்ளது.இதனால், தென் கடலோர மாவட்டங்கள் மற்றும் கடலுாரில், இன்று கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில், கன மழைக்கு வாய்ப்பு இல்லை.சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும்; ஒரு சில இடங்களில், விட்டு விட்டு மழை பெய்யலாம். கடலுக்கு செல்லும் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நேற்று காலை, 8:30 மணி நிலவரப்படி, அதிகபட்சமாக, நாகபட்டினம் மாவட்டம், வேதாரண்யம் - 22; தஞ்சை மாவட்டம், மதுக்கூர் - 9; நெல்லை மாவட்டம், பாபநாசம் - 8 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

## சேற்றுப்புண்ணை தடுக்கும் மஞ்சள் பொடி!

ழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, கோட்டூர்புரம் பகுதியில், சித்த மருத்துவ டாக்டர்கள், பார்த்தீபன், கனகவள்ளி, வீரபாபு அடங்கிய குழு சிகிச்சை அளித்தது. காய்ச்சல் வராமல் தடுக்கவும், நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தவும், நிலவேம்பு கஷாயம், சளி தொல்லை தீர, துாதுவளை கஷாயம், சேற்றுப்புண்ணுக்கு மந்தன் தைலம், குப்பை மேனி பொடி, மஞ்சள் பொடி, வெப்பாலை தைலம் கலந்த கழிம்பு, மக்களுக்கு வழங்கப்பட்டது. டாக்டர் வீரபாபு கூறுகையில், "தண்ணீர், சேறு நிறைந்த பகுதிகளில் செல்ல வேண்டிய நிலை வந்தால், கால் விரல்களில், வேப்பெண்ணெய் தடவிச் செல்லுங்கள். திரும்பி வந்ததும், கால்களை நன்கு கழுவி, மஞ்சள் பொடியை தடவினால் போதும்; சேற்றுப்புண் வராது," என்றார்.

## பச்சை மிளகாய் கிலோ ரூ.80



பழநி,:தொடர் மழையால் வரத்து குறைந்து கத்தரிக்காயை பின்னுக்குதள்ளி பச்சை மிளகாய் விலை, கிலோவுக்கு ரூ.80 ஆக அதிகரித்துள்ளது.திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், பழநி சுற்றுப்புற கிராமங்களில் பல ஏக்கர் பரப்பளவில் தக்காளி, கத்தரி, அவரை, முருங்கை, பச்சை மிளகாய், காலிபிளவர் உள்ளிட்ட காய்கறிகள் அதிகளவில் பயிரிடப் படுகிறது.சில நாட்களாக மழைபெய்து வருவதால் காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. உழவர் சந்தை மற்றும் மார்க்கெட்களுக்கு வரத்து வெகுவாக குறைந்துள்ளது. குறிப்பாக கத்தரிக்காய் அழுகி ஒரு மாதமாக ஒரு கிலோ ரூ.80 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து தற்போது மழைக்கு மிளகாய்செடிகள் அழுகிவருவதால் வரத்து பாதியாக குறைந்துள்ளது. இதனால் கடந்தவாரம் ஒரு கிலோ ரூ.35 விற்ற பச்சை மிளகாய் தற்போது ரூ.80 ஆக உயர்ந்துள்ளது. மளிகை கடைகளில் சில்லரை விலைக்கு கிலோ ரூ.90 வரைவிற்கின்றனர்.நேற்றைய பழநி உழவர் சந்தை நிலவரம்(ஒருகிலோ) தக்காளி ரூ.40, அவரை ரூ.30, ப.மிளகாய் 60, சி.வெங்காயம் ரூ.50, பெல்லாரி ரூ. 40, முருங்கை ரூ. 120, கத்தரி- ரூ.70, வெண்டை-ரூ.24, உருளை ரூ.32, பீர்க்கங்காய் ரூ.30க்கு விற்பனையானது.உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகையில்,“ மழையால் காய்கறிகளின் வரத்து குறைந்து கொண்டேவருகிறது. குறிப்பாக சில நாட்களாக கத்தரிக்காய் விலை கூடுதலாக உள்ளது. அதைவிட

வரத்துகுறைந்து, பச்சைமிளகாய் கடந்தவாரத்தை விட இருமடங்கு உயர்ந்து ஒருகிலோ ரூ.80 விற்கிறது. மேலும் சென்னை, கடலுார் மாவட்டங்களில் விலை பலமடங்கு கூடுதலாக கிடைப்பதால் வியாபாரிகள் காய்கறிகளை மொத்தமாக வாங்கி அப்பகுதிகளுக்கு அனுப்புகின்றனர். இதனால் காய்கறிவிலை உயர்ந்துள்ளது," என்றார்.

## ரூ.25 லட்சம் கூரல் மீன்கள் பாம்பன் மீனவர் வலையில் சிக்கின



ராமேஸ்வரம்:பாம்பன் மீனவர்கள் வலையில் ரூ.25 லட்சம் மதிப்புள்ள அரியவகை கூரல் மீன்கள் சிக்கின. இம்மீனில் உள்ள 'ஒயிட் ஜெல்லி' எனும் உறுப்பு வெளிநாடுகளில் பீர், ஒயின் தயாரிக்க பயன்படுத்துவதாக மீனவர்கள் தெரிவித்தனர். மன்னார் வளைகுடா, இந்திய பெருங்கடலில் 2,200 வகையான மீன்கள் உள்ளன. இதில் திமிங்கலம், சுறா, சீலா, பாரை, கணவாய், நண்டு, இறால், வாவல் உள்ளிட்ட 100 வகையான மீன்களே மீனவர்கள் வலையில் சிக்குவது வழக்கம். ஆனால் உப்பு தன்மை குறைந்த ஆழ்கடலில் வசிக்கும் அரிய வகை 'கூரல் மீன்கள்' எளிதில் சிக்குவதில்லை. கூட்டமாக வசிக்கும் இம்மீன்கள் வலையில் சிக்கினால் மீனவர்கள் லட்சாதிபதி ஆகின்றனர்.ராமேஸ்வரம் அருகே பாம்பன் மீனவர்கள் மீன்பிடித்துவிட்டு நேற்று கரை திரும்பினர். இதில், 1.7 டன் எடையில் கூரல் மீன்கள் சிக்கின. ஒரு மீன் சராசரியாக 14 கிலோ இருந்தது. ஒரு கிலோ கூரல் ரூ. 1,460 வீதம் ரூ.

24.80 லட்சத்திற்கு புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைபட்டினம் வியாபாரி ஒருவர் வாங்கியதால், மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். இம்மீனின்சுவாச பாதையில் உள்ள 'ஒயிட் ஜெல்லி' யை 'பன்னா' என மீனவர்கள் அழைக்கின்றனர். இது சீனா, ஜப்பான், தைவான் மற்றும் ஐரோப்பா நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகிறது. அங்கு ரசாயன கலவையில் சுத்தம் செய்து ரப்பர் போன்ற பிளாடராக மாற்றப்படுகிறது. இதனை 'ஸிங்கிளாஸ்' என கடல் சார் விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். ஒரு மீனில் கிடைக்கும் 400 கிராம் ஸிங்கிளாஸ், ஒரு கபடி கிரவுண்ட் அளவுக்கு இழுக்க முடியுமாம். பின் உயர்ரக பீர், ஒயின், விஸ்கி கெட்டு போகாமல் இருக்க ஸிங்கிளாஸ் மூலம் வடிகட்டுவார்கள். இதனால் தான் இம்மீனுக்கு மவுசு அதிகம்.இதுகுறித்து பாம்பன் மீனவர் கூறியதாவது:ஆண் கூரலில் 'பன்னா' பெரிதாகவும், பெண் மீனில் சிறிதாகவும் இருக்கும். இதை தனியே பிரித்து பதப்படுத்தி, வெளிநாடுக்கு அனுப்புவார்கள். அங்கு உயர்ரக பீர், ஒயின் தயாரிக்க பன்னாவை பயன்படுத்துவார்கள். வெளிநாட்டில் கூரல் பன்னாவுக்கு கிராக்கி என்பதால், ஒரு கிலோ பன்னா விலை ரூ.1.50 முதல் 2 லட்சம் வரை விற்பனையாகும். பன்னா தவிர மற்றவை விற்பனைக்காக கோவை, சென்னை மீன் மார்க்கெட்டு செல்லும், என்றார்.

**கன மழைக்கு இனி வாய்ப்பில்லை**



சென்னை: 'சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களில், இனி கன மழைக்கு வாய்ப்பு இல்லை' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. வட கிழக்கு பருவ மழை, அக்டோபர் முதல் டிசம்பர் வரை பெய்யும். தமிழகத்தில், வட கிழக்கு பருவ மழை மூலம், சராசரியாக, 44 செ.மீ., மழை கிடைக்கும். அக்., 1 முதல், நேற்று வரை வட கிழக்கு பருவ மழை மூலம், தமிழகத்தில் பெய்த மழை குறித்து, வானிலை மையம் வெளியிட்ட அறிக்கை:ஒரு மடங்கு அதிகம்இந்த கால கட்டத்தில் சராசரியாக, 39 செ.மீ., மழை பெய்யும். ஆனால், நடப்பு ஆண்டில், 64 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. மிக அதிகபட்சமாக, காஞ்சிபுரம் மாவட்டத்தில், சராசரியை விட, 213 சதவீத மழை அதிகமாக பெய்துள்ளது. இதற்கு அடுத்து, திருவள்ளூர் - 176; வேலுார் - 133; சென்னை - 128; நெல்லை - 125; விழுப்புரம் - 111; கடலுார் - 102 செ.மீ., மழை, சராசரியை விட கூடுதலாக பதிவாகி உள்ளது.கோவை, மதுரை, நாமக்கல், ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் மட்டுமே, சராசரி மழை பெய்துள்ளது. இன்று முதல் டிச., 13 வரையிலான நான்கு நாட்களுக்கான, வானிலை முன் அறிவிப்பில், இன்று மட்டுமே கன மழைக்கு வாய்ப்பு உள்ளது. அதுவும், தென் மாவட்டங்களில் மட்டும் பெய்யும். டிச., 11, 12, 13ல், தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு இல்லை. சென்னையில், அடுத்த, 48 மணி நேரத்துக்கு, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில், லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. ஒரு வாரமாக, சென்னையில் குறைந்திருந்த வெப்ப நிலை மீண்டும் அதிகரித்து, அதிகபட்சமாக, 30 டிகிரி செல்சியஸ் பதிவாகும். குறைந்த பட்ச வெப்பநிலை, 25 டிகிரி செல்சியசாக இருக்கும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

10 ஆண்டில் அதிகம்:

சென்னையில், கடந்த, 10 ஆண்டுகளில், நடப்பு ஆண்டு டிசம்பரில், அதிக மழை பதிவாகி உள்ளது. வழக்கமாக டிசம்பரில் சராசரியாக, 19 செ.மீ., மழை சென்னையில் பதிவாகும். 2005 டிசம்பரில், 42 செ.மீ., மழை பெய்தது. நடப்பு ஆண்டில், 53 செ.மீ., மழை பெய்துள்ளது. இதுவரை, மிக அதிகபட்சமாக, 1946 டிசம்பரில், 69 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

## சூடு பிடித்தது காய்கறி விற்பனை தக்காளி, வெங்காயம் விலை சரிவு

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில், ஒரு வாரமாக குறைந்திருந்த காய்கறிகள் விற்பனை, மீண்டும் சூடு பிடித்துள்ளது. சென்னை, கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தினமும், 300 லாரிகளுக்கு மேல் காய்கறிகள் வரும். நவம்பர், 12ம் தேதிக்கு பின், மழை தீவிரம் அடைந்ததால், காய்கறிகள் வரத்து சரிந்தது. 100 லாரி காய்கறிகள் மட்டுமே வந்தன. அதனால், விலை கடுமையாக உயர்ந்தது. இந்நிலையில், 1ம் தேதி கொட்டி தீர்த்த கனமழையால், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில், பெரும் சேதம் ஏற்பட்டது. வீடு, பொருட்களை இழந்து, மக்கள் முகாம்களில் தங்கினர். இதனால், கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விற்பனை பெருமளவு சரிந்தது.

சென்னை வந்த காய்கறிகள், வேறு மாவட்டங்களுக்கு திருப்பி விடப்பட்டன. தற்போது, வெள்ளம் வடிந்துள்ள நிலையில், மூன்று மாவட்ட மக்களும், இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றனர். இதனால், நேற்று முதல் கோயம்பேடு மார்க்கெட்டில், காய்கறி விற்பனை சூடுபிடித்துள்ளது. நேற்று வந்த, 200 லாரி காய்கறிகளும் உடனடியாக விற்பனையானதால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், தக்காளி, வெங்காயம் உருளைக் கிழங்கு, பீட்ரூட் உள்ளிட்ட சில காய்கறிகளின் விலை சரிந்துள்ளதால், பொது மக்களும் ஆறுதல் அடைந்துள்ளனர்.

| காய்கறி | (கிலோ) ரூபாய் |
|---|---|
| பீன்ஸ் | 40 |
| கேரட் | 35 |
| பீட்ரூட் | 30 |
| நூக்கல் | 30 |
| பச்சை பட்டாணி | 80 |
| காலிபிளவர் | 30 |
| டபுள் பீன்ஸ் | 60 |

| | |
|---|---|
| சேனைக்கிழங்கு | 30 |
| சேப்பங்கிழங்கு | 25 |
| பச்சை மிளகாய் | 20 |
| இஞ்சி | 40 |
| கத்தரிக்காய் | 40 |
| காய்கறி | (கிலோ) |
| ரூபாய் | |
| வெண்டைக்காய் | 40 |
| கோவக்காய் | 40 |
| சுரைக்காய் | 30 |
| அவரைக்காய் | 50 |
| பெல்லாரி | |
| வெங்காயம் | 30 |
| சாம்பார் | |
| வெங்காயம் | 40 |
| உருளைக் கிழங்கு | 20 |
| முருங்கைக்காய் | 80 |
| தக்காளி | 25 |
| முட்டைக்கோஸ் | 15 |

## 5 ஆயிரம் ஏக்கர் குறுவை 'அம்போ'

நாகையில், ஒரு மாதமாக தொடர்ந்து பெய்து வரும் கன மழையால், அறுவடைக்கு தயாராக இருந்த, 5,000 ஏக்கர் குறுவை பயிர்கள் நாசமாயின.காவிரியின் கடை மடையான, நாகை மாவட்டத்தில், நடப்பு ஆண்டு, காவிரியில் தண்ணீர் திறக்கப்படாததால் குறுவை சாகுபடி பொய்த்தது. இப்போது மீண்டும் வெள்ள பாதிப்பால், 5,000 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த குறுவையும் பாதிக்கப்பட்டுள்ளது; விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## மதுராந்தகம் ஏரியிலிருந்து 9,500 கனஅடி நீர் வெளியேற்றம்

செங்கல்பட்டு:மதுராந்தகம் ஏரியிலிருந்து, வினாடிக்கு 9,500 கன அடி உபரிநீர் வெளியேற்றப் படுகிறது.மதுராந்தகம் ஏரியின் மொத்த கொள்ளளவு, 609 மில்லியன் கன அடி: அழம் 21:3 அடி; கரையின் நீளம் 12,900 அடி; ஐந்து மதகுகள் உள்ளன. உயரம் 24:3 அடி; தற்போது 23.6 அடி தண்ணீர் உள்ளது.

திருவண்ணமாலை மாவட்டம், கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து ஏரிக்கு நீர்வரத்து கூடியுள்ளது. கடந்த நவம்பர் மாதம், 13ம் தேதியிலிருந்து, 28ம் தேதி வரை, உபரி நீர் வெளியேற்றப்பட்டது. அதன் பிறகு, கடந்த 29ம் தேதி, நீர் வரத்து குறைந்ததால், நீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டது.அதை தொடர்ந்து, கன மழை பெய்ததால், 30ம் தேதி முதல், ஏரியிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.வினாடிக்கு 9,500 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது என, பொதுப்பணி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## 23 ஆயிரம் ஹெக்டேர் பயிர் சேதம்: அரசுக்கு அறிக்கை அனுப்பி வைப்பு

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில், தொடர் மழையால், 23 ஆயிரம் ஹெக்டேர் பயிர் சேதமடைந்துள்ளதாக, கணக்கீடு செய்யப்பட்டு, அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. கடந்த, ஒரு மாதமாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் கனமழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டம் முழுவதும், ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய பயிர்கள் நாசமானது. மாவட்டத்தில் அதிகபட்சமாக, செய்யாறு, வந்தவாசி, ஆரணி பகுதியில், பல்லாயிரம் ஏக்கரில் பயிரிட்டிருந்த நெற்பயிர், மணிலா நீரில் மூழ்கியுள்ளன. பெரும்பாலான இடங்களில், அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர் நாசமானதால், விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் உள்ள, 75 சதவீத ஏரி, முழு கொள்ளளவை எட்டியுள்ளன. எனவே, ஏரிகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றம் காரணமாக, ஏரிகளுக்கு அருகில் இருந்த விளை நிலங்களுக்குள் தண்ணீர் புகுந்து, கடுமையாக சேதமடைந்துள்ளன. விளை நிலத்தில் இருந்து வெள்ளம் வடியாமல்

தேங்கியதால், பயிர்கள் அழுகிவிட்டன. இனிமேல் வெள்ளம் வடிந்தாலும் விளைச்சலை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதும் நேற்று வரை நடந்த கணக்கெடுப்பின்படி, 23 ஆயிரம்ஹெக்டேரில் பயிர் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும், அதில், 80 சதவீதம் நெற் பயிர் சேதம் என்றும், மாவட்ட நிர்வாகத்தின் மூலம், அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், மாவட்டம் முழுவதும் ஏற்பட்டுள்ள பயிர் சேதம், இதைவிட, இரு மடங்கு இருக்கும் என, விவசாயிகள் கூறுகின்றனர். மேலும், சாகுபடி செலவை மதிப்பிட்டால், அரசு அறிவித்துள்ள இழப்பீடு போதுமானதல்ல. இதை உயர்த்தி வழங்க வேண்டும். பயிர் சேதத்தை முறையாக கணக்கிட வேண்டும். பாதிப்பை மதிப்பிட வருவாய்த்துறை, வேளாண்துறை அதிகாரிகள் கொண்ட குழுவை, ஒன்றியங்கள் வாரியாக அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தஞ்சை கோணவாரி வாய்க்காலில் உடைப்பு: நீரில் மூழ்கியது 500 ஏக்கர் சம்பா பயிர்கள்

தஞ்சாவூர்: தஞ்சை அருகேயுள்ள, கோணவாரி வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பால், அப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டிருந்த, 500 ஏக்கர் சம்பா பயிர்கள் நீரில் மூழ்கியதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். டெல்டா மாவட்டங்களில், கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால், தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களில் உள்ள, 1,400 ஏரி, குளங்கள் நிரம்பின. இதில், பல்வேறு இடங்களில் உள்ள ஏரி, குளங்களில் உடைப்பு ஏற்பட்டு வந்த நிலையிலும், சில இடங்களில் வாய்க்கால்கள் முறையாக துார் வாராததால், அதிக உடைப்பு ஏற்பட்டு, சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா பயிர்கள் நீரில் மூழ்கின. இதனால் விவசாயிகள் மிகவும் கவலையில் உள்ளனர். இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக பெய்ந்த மழையால், தஞ்சாவூர் மாவட்டம், பூதலுார் அருகேயுள்ள பழைய கல்விராயன்பேட்டை கிராமத்தில், கள்ளபெரம்பூர் ஏரிக்கு செல்லும் சாலையில் கோணவாரி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டது. இதனால், அருகில்

சாகுபடி செய்யப்பட்டிருந்த, 500 ஏக்கர் பயிர்கள் நீரில் முழ்கின. அத்துடன் புதுக்கோட்டை, திருச்சி சுற்றுப்புற பகுதிகளில் பெய்யும் மழை தண்ணீர் இந்த வாய்க்கால் மூலமாக வந்து கள்ளபெரம்பூர் ஏரியில் சென்று கலக்கும். அவ்வாறு தண்ணீர் செல்லும் வாய்க்கால் முழுவதும் முறையாக துார்வாராததால் புதர்கள் மண்டி தண்ணீர் செல்ல முடியமால் உடைப்பு ஏற்பட்டு வயல்களில் நீர் புகுந்தன.நெற்பயிர்கள் முளைத்து வரும் நிலையில், வயலில் நீர் அதிகமாக இருப்பதால், பயிர்கள் பாதிக்கும் அபாயம் உள்ளதால், அப்பகுதி விவசாயிகள் சோககத்தில் உள்ளனர்.

**காவிரி, கொள்ளிடம் ஆறுகளில் நீர் திறப்பு**

'அமராவதி அணையிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீரால், காவிரியில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை தவிர்க்க, கொள்ளிடம் ஆற்றிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. ஆற்றில் திறக்கப்படும் தண்ணீர் வீணாக கடலில் கலப்பதோடு, கரையோர விவசாய நிலங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்' என, விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் நீர்மட்டம், 90 அடியை எட்டியது. இதனால், அமராவதி அணையில் இருந்து, வினாடிக்கு, 14 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அமராவதியிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர், கரூர் மாவட்டத்தில் காவிரி ஆற்றுடன் கலந்து, மாயனுார் தடுப்பணையை கடந்து, திருச்சி மாவட்டம், முக்கொம்பு அணைக்கு வந்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி, முக்கொம்பு அணைக்கு, 17 ஆயிரத்து, 600 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் காவிரியில் சென்று கொண்டிருக்கும் நிலையில், அமராவதி அணை தண்ணீரும் சேர்ந்துள்ளதால், காவிரி ஆற்றில் வெள்ளநீர் பெருக்கெடுத்துள்ளது. ஏற்கனவே, டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து, விவசாய நிலங்கள் மழை நீரில் மூழ்கியிருக்கும் நிலையில், காவிரியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால், பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்க, கொள்ளிடம் ஆற்றிலும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால், திருச்சி, அரியலுார் மற்றும் நாகை மாவட்ட நிர்வாகம் சார்பில், காவிரி மற்றும் கொள்ளிடம் கரையோரப் பகுதி மக்களுக்கு

வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கரையோரங்களில், போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது. ஏற்கனவே, டெல்டா மாவட்டங்களில் பெய்த தொடர் மழையால், நெல் வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ள நிலையில், கடந்த, இரண்டு நாட்களில், 3.25 டி.எம்.சி., தண்ணீர் காவிரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளின் வழியாக திறக்கப்பட்டு, வீணாக கடலுக்கு சென்றுள்ளது. அதிகப்படியான தண்ணீர் வீணாக கடலில் கலப்பதோடு, தாழ்வான பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் பாதிப்பை ஏற்படுத்தவும் வாய்ப்பு உள்ளது என, டெல்டா மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

## வேதாரண்யத்தில் 22 செ.மீ., மழை

நாகை : தமிழகத்தில் கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக வேதாரண்யத்தில் 22 செ.மீ., அளவுக்கு மழை கொட்டித் தீர்த்துள்ளது. தஞ்சாவூர், பேராவூரணியில் 9 செ.மீ., மழையும், திருத்துறைப்பூண்டி, நெல்லை பாபநாசத்தில் 8 செ.மீ., மழையும் பெய்துள்ளது.

## முழு கொள்ளளவை எட்டியது மணிமுத்தாறு அணை

திருநெல்வேலி : மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 106 அடியிலிருந்து 117 அடியாக நேற்று உயரந்த நிலையில், இன்று(டிச.,10) அதிகாலை முழு கொள்ளளவான 118 அடியை எட்டியது. அணைக்கு வரும் 2,000 கனஅடி நீரும் உபரி நீராக திறந்து விடப்படுகிறது. அணையிலிருந்து திறக்கப்படும் நீர் தாமிரபரணி ஆற்றில் கலக்கும். தாமிரபரணியில் தற்போது 25,000 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மணிமுத்தாறில் நீர் திறப்பு அதிகரிப்பு

நெல்லை : நெல்லை மாவட்டம் மணிமுத்தாறு அணையில் இருந்து திறக்கப்படும் உபரி நீரின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையில் இருந்து

வெளியேற்றப்படும் நீரின் அளவு விநாடிக்கு 2000 கனஅடியில் இருந்து 4800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மணிமுத்தாறு அணை, முழுகொள்ளளவான 118 அடியை எட்டியதை அடுத்து அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையில் நீர்இருப்பு 5511 மில்லியன் கனஅடியாக உள்ளது.

**தைப்பொங்கலுக்கு செங்கரும்பு பேரையூரில் அறுவடைக்கு தயார்**

பேரையூர்: தை பொங்கல் கொண்டாட மதுரை மாவட்டம் பேரையூர் பகுதிகளில், செங்கரும்பு விளைந்து அறுவடைக்கு தயாராகவுள்ளது.பேரையூர் அருகேவுள்ள முருகனேரி, தாதன்குளம், கோபிநாயக்கன்பட்டியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் செங்கரும்பு நடவு செய்யப்பட்டது. ஏக்கருக்கு 17 ஆயிரம் கரும்பு கருணைகள் நடவு செய்யப்பட்டன. நடவு செய்த துவக்கத்தில் சரியாக மழை இல்லாததால் வளர்ச்சி பாதிக்கப்பட்டது. ஆனால் அறுவடை நெருங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக நல்ல மழை பெய்ததால் நோய்கள் நீங்கி கரும்பு வளர்ந்துள்ளது. தற்போது ஆறு அடி வரை வளர்ந்து, 15 நாட்களில் அறுவடைக்கு தயாராக உள்ளது. விவசாயிகள் கூறியதாவது: இப்பகுதி செங்கரும்பு நீண்டதாகவும், தடிமனாகவும், சுவையாகவும் இருப்பதால் வாங்க வியாபாரிகள் போட்டி போடுவர். ஏக்கருக்கு ரூ.இரண்டு லட்சம் செலவு செய்துள்ளோம். தேவை அதிகம் இருப்பதால் விலை உயரும் நிலை உள்ளது. இந்தாண்டு லாபம் கிட்டும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளோம், என்றனர்.

**மழை காரணமாக இளநீர் ஏலமையம் காத்து வாங்குதுங்க! விவசாயிகளுக்காக அதிகாரிகள் காத்திருப்பு**

காத்து வாங்குதுங்க! பொள்ளாச்சி: மழை காரணமாக, இளநீர் மற்றும் தேங்காய் பருப்பு வரத்து இல்லாததால் நேற்று, அரசின் இளநீர் ஏலமையம் 'வெறிச்'சோடி காணப்பட்டது.

கேரளாவை தொடர்ந்து, கோவை மாவட்டத்தில், பொள்ளாச்சி, ஆனைமலை பகுதியில் தென்னை சாகுபடி அதிகமாக நடக்கிறது. இதனால், இப்பகுதியில் தென்னை வளர்ச்சி வாரியத்தின் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண் பல்கலையின் தென்னை ஆராய்ச்சி மையம் சார்பில், புதுப்புது தென்னை ரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டு சாகுபடியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. சாகுபடிக்கு மானியம், உரம் வழங்கப்பட்டு, தென்னை சாகுபடிக்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது. மேலும், தென்னையில் இருந்து பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரித்து, வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**ஜூனில் துவக்கம்**

இச்சூழலில், தமிழக அரசு தென்னை சாகுபடியாளர்களின் நலன் கருதி, பொள்ளாச்சி அருகேயுள்ள திப்பம்பட்டியில் கடந்த, ஜூன்.,16ல், முதல் இளநீர் வணிக வளாகம் திறக்கப்பட்டது. வேளாண், வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் முன்னிலையில் துவங்கிய முதல்நாள் ஏலத்தில், மிகக்குறைந்த அளவே ஏலத்துக்கு இளநீர் வரத்து இருந்தது. அதுவும் அதிகாரிகளின் வற்புறுத்தலுக்காக ஒன்றிரண்டு விவசாயிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடந்த ஏலத்தில், சில ஆயிரம் இளநீர்களே ஏலத்துக்கு கொண்டு வரப்பட்டன. அதுவும், இரண்டாம் தர, மூன்றாம் தர இளநீர்களே கொண்டு வரப்பட்டன. இது ஏலம் எடுக்க வந்த, ஒரு சில வியாபாரிகளையும் அதிருப்தி அடையச் செய்து, அடுத்த வாரங்களில் இருந்து தங்கள் வரவை நிறுத்திக் கொண்டனர். இதனால், விவசாயிகளும் ஏலமையத்துக்கு வருவதை நிறுத்திக்கொண்டனர்.

**வரத்து குறைந்தது ஏன்?**

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: வெளி மார்க்கெட்டில் இளநீருக்கு நல்ல விலை கிடைக்கிறது. இதனால், வெளி மாநிலங்களுக்கும் லட்சக்கணக்கான இளநீர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. மேலும், தற்போதைய சூழலில், ஆட்கள் கிடைப்பது அரிதாகி விட்டது. இதனால், இளநீர் பறிப்பை இளநீர் வியாபாரிகளின் பொறுப்பிலேயே விடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தொகையை வியாபாரிகளிடம் இருந்து முன்கூட்டியே வசூலித்துவிடுவதால், இளநீர் இறக்குவது அதிகரித்துள்ளது.

இது விவசாயிகளான எங்களுக்கு சிரமம் இல்லாமல் போய்விடுகிறது. இக்காரணங்களாலேயே, திப்பம்பட்டி ஏலமையத்துக்கு விவசாயிகள் வரத்து இல்லை. இவ்வாறு விவசாயிகள் கூறினர். ஆனாலும், அதிகாரிகள் விடாமல் விவசாயிகளை சந்தித்து வந்தனர். இச்சூழலில், கடந்த சில வாரங்களுக்கு முன், இளநீர் ஏலமையத்தில், தேங்காய் பருப்பு ஏலமும் நடக்கும் என அறிவிக்கப்பட்டது. விவசாயிகளும் தேங்காய் பருப்பு கொண்டு வந்தனர். நல்ல விலை கிடைத்த நிலையில், பருப்பு வரத்தும் கூடியது. இச்சூழலில் தென்மேற்கு பருவமழை முடிந்து, வடகிழக்கு பருவமழை துவங்கியது. மழையின் தாக்கம் அதிகமாக இருந்ததால், தேங்காய் பருப்பு வரத்து நின்று போனது. இளநீர் வரத்தும் மிகவும் குறைந்தது. நேற்று, ஏலமைய கண்காணிப்பாளர் செல்வராஜ், மேற்பார்வையாளர் மணிவாசகம் வேளாண் அலுவலர் பல்கீஸ் மற்றும் வேளாண் உதவி அலுவலர் சுந்தரராஜன் ஆகியோர் ஏல ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தனர். ஆனாலும், இளநீர் மற்றும் தேங்காய் பருப்பை விவசாயிகள் யாரும் கொண்டு வரவில்லை. வெகுநேர காத்திருப்புக்கு பின், தெரிந்த, வழக்கமாக தேங்காய் பருப்பு மற்றும் இளநீர் கொண்டு வரும் விவசாயிகளிடம் கேட்டபோது, மழையின் காரணமாக கொண்டு வரவில்லை என்ற பதில் கிடைத்தால், அதிகாரிகள் ஏமாற்றம் அடைந்தனர்.இப்படியே மழை நீடித்தால் அடுத்த வாரமும் ஏலமையம் செய்யல்படுமா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஆழியாறு அணைக்கு நேற்றைய நீர்வரத்து 3,225 கனஅடி:மூன்றாவது நாளாக உபரிநீர் வெளியேற்றம்

பொள்ளாச்சி:பொள்ளாச்சி ஆழியாறு அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியதையடுத்து, மூன்றாவது நாளாக மதகுகள் வழியாக உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய

அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர், பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள, ஆறு ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டு பாசனத்தில், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது. கடந்தாண்டு பருவமழை கை கொடுத்ததால், ஆழியாறு அணை நீர்மட்டம் கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து, இரண்டு மாதங்கள் நிரம்பிய நிலையிலேயே ஆழியாறு அணை காட்சியளித்தது. மேலும், கடந்த ஒரு ஆண்டாக 100 அடிக்கு குறையாமல் அணை நீர்மட்டம் நீடித்ததால், விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்தாண்டை போன்று, இந்தாண்டும் பருவமழை கை கொடுத்து, அணை நிரம்பும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இதனால், அணை முழு கொள்ளளவை எட்டுமா என கேள்விக்குறி எழுந்தது. கடந்த சில நாட்களாக ஆழியாறு மற்றும் நீர்பிடிப்பு பகுதிகளில், தொடர் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டமும் மெல்ல.. மெல்ல.. உயர்ந்து வருகிறது. கடந்த 6ம் தேதி ஆழியாறு அணை முழு கொள்ளளவை எட்டியதால், உபரிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து, வினாடிக்கு, 4000 கன அடிநீர் வெளியேற்றப்பட்டது. தொடர்ந்து, மூன்றாவது நாளாக நேற்றும் ஆழியாறு அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டது.

தொடர் கண்காணிப்பு 'ஆழியாறு அணை நீர்மட்டம் முழு கொள்ளளவை எட்டியதால், உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. தொடர்ந்து, கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன; ஆழியாறு ஆற்றுப்பகுதியில் யாரும் குளிக்க வேண்டாம், கால்நடைகளை கட்டி விட வேண்டாம், ஆற்றோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அறிவுரைகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன,' என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## கால்நடைகளின் உடற்பாதிப்பு கண்டறிய 'அல்ட்ரா ஸ்கேன்'

சேலத்தில், கால்நடைகளின் உடல் பாதிப்புகளை கண்டறிய, 'அல்ட்ரா ஸ்கேன்' முறை பயன்பாடுக்கு வந்துள்ளது. சேலம் மாவட்டத்தில், கால்நடை வளர்ப்பில், விவசாயிகள் அதிகம் ஈடுபடுகின்றனர். இங்கு, 15.26 லட்சம் எண்ணிக்கையிலான கால்நடைகள் உள்ளன. அவற்றை நோய் தாக்காத வண்ணம், மாதந்தோறும், 650 சிறிய, பெரிய கிராமப்புறங்களில், தடுப்பூசி முகாம் நடத்தப்பட்டு, நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சமீபகாலமாக, பசு, எருமைகளுக்கு செயற்கை கருவூட்டல் முறை செயல்படுத்தப்படுகிறது. கருப்பிடிக்காத, மலட்டுத்தன்மை உள்ள கால்நடைகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்க, 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்' முறை கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் மூலம், உடலில் உள்ள பாதிப்புகள், அளிக்க வேண்டிய சிகிச்சைகள் குறித்து, கால்நடை மருத்துவர்களுக்கு தெரியும். மாவட்டத்தில், ஒரு ஸ்கேன் மட்டும் பயன்பாட்டில் இருந்த நிலையில், ஓமலூர் மருத்துவமனைக்கு புதிதாக வாங்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் நிம்மதி அடைந்துள்ளனர்.

சேலம் கால்நடைத்துறை உதவி இயக்குனர் சுந்தரராஜன் கூறுகையில், "மனிதர்களுக்கு, எப்படி ஸ்கேன் முறை பயன்படுத்தப்படுகிறதோ, அதுபோல் கால்நடைகளுக்கும் செய்யப்படும். இதன் விவரம் குறித்து, பெரும்பாலான விவசாயிகளுக்கு தெரியவில்லை. கால்நடை மருத்துவ முகாமில், இக்கருவி மூலம் சிகிச்சை அளிக்கிறோம்," என்றார்.

## மழைநீர் தேங்கியதால் பருத்தியில் வாடல் நோய்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில், மழைநீர் தேங்கியதால், பருத்தியில் வாடல் நோய் ஏற்பட்டுள்ளது. நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில், வெள்ளக்கல்பட்டி, ஜேடர்பாளையம், தொப்பபட்டி, சீராப்பள்ளி ஆகிய பகுதிகளில், மரபணு மாற்றப்பட்ட பருத்தி, பெருமளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பெய்த மழையால், பருத்தியில் வாடல் நோய் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, நாமகிரிப்பேட்டை அட்மா சார்பில், லத்துவாடி

வேளாண் அறிவியல் நிலைய, உழவியல் உதவி பேராசியர் டாக்டர் அழகுதுரை, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் ஆகியோர், பருத்தி செடிகளை பார்வையிட்டனர்.

பின், அவர்கள் கூறியதாவது: தொடர் மழை காரணமாக, பருத்தி வயல்களில் தண்ணீர் தேங்கி, செடிகளுக்கு தேவையான ஆக்சிஜன் கிடைக்கவில்லை. மேலும், சல்லி வேர்கள் தண்ணீரை உறிஞ்சவில்லை. நோய் தாக்கப்பட்ட பருத்தி வயல்களில், தண்ணீரை உடனடியாக வெளியேற்றி, வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும், பசுந்தாள் உர பயிர்களை, இடையே சுழற்சியாக சாகுபடி செய்ய வேண்டும். பிற செடிகளுக்கு நோய் பரவாமல் தடுக்க, 'டிரைக்கோ டெர்மா விரிடி' என்ற மருந்தை இரண்டு கிராம் அளவு, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, செடிகளை சுற்றி ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்தால், வாடல் நோயிலிருந்து பருத்தி செடிகள் மீட்கப்படலாம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

ப.வேலூர்: ப.வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், அறுவடைக்குப் பின் செய்நேர்த்தி குறித்து, விவசாயிகளுக்கு ஒரு நாள் தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. ப.வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் லோகாம்பாள் தலைமை வகித்தார். விளை பொருள்களை சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், அறுவடைக்குப்பின் செய் நேர்த்தி தொழில்நுட்பம், விளை பொருள்களுக்கு ஈட்டுக்கடன் வழங்குதல், உழவர் நலத்திட்டம், குளிர்பதன கிட்டங்கி வசதி உள்ளிட்டவை குறித்து மாநில வேளாண் விற்பனைக்கூட உதவி இயக்குனர் சாசத்தப்பன் பேசினார். சேலம் வேளாண் விற்பனை குழுச்செயலர் செல்லதுரை பேசுகையில்,"ப.வேலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், வாரந்தோறும், வியாழக்கிழமை கொப்பரை ஏலம் நடந்து வருகிறது. ஜனவரி மாதம் முதல், மட்டை தேங்காய் ஏலமும் நடைபெறும்," என்றார். வேளாண் உதவி இயக்குனர் குருலிங்கம், வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சிட்டா நகல் இல்லாதவர்கள் நிலவரி ரசீதை சமர்ப்பித்தால் மானியம்

கோத்தகிரி: 'சிட்டா நகல் இல்லாதவர்கள், சர்வே எண் மற்றும் நிலவரி ரசீதை சமர்ப்பித்தாலே மானியம் வழங்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது.

கோத்தகிரி புடியங்கி கிராமத்தில் சிறுதேயிலை விவசாயிகளுக்கான, பயிற்சி முகாம் மற்றும் விவசாயிகள் சங்கம் துவக்க விழா நடந்தது. தேயிலை வாரிய உதவி இயக்குனர் பகலவன் வரவேற்றார். ஊர் தலைவர் மாதாகவுடர் தலைமை வகித்தார். தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, புடியங்கி ஹிரியோடைய்யா சிறுவிசாயிகள் சங்கத்தை திறந்து வைத்து பேசியதாவது: தேயிலை தோட்டங்களை உரிய நேரத்தில் கவாத்து செய்து, தரமான பசுந்தேயிலை பறிக்க, விவசாயிகள் முன்வரவேண்டும். தேயிலை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும், ஓரளவு தரமான பசுந்தேயிலை ஒரு கிலோவுக்கு, தொழிற்சாலைகளில், 12.50 ரூபாய் சராசரி விலை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு, பசுந்தேயிலை வழங்கினால்தான், தொழிற்சாலைகளில் தரமான தேயிலை துாள் தயாரிப்பதுடன், மார்க்கெட்டிங் செய்ய முடியும்.

தேயிலை வாரியத்தில் பதிவுசெய்யப்படும் சிறுதேயிலை விவசாயிகள் சங்கங்களுக்கு கண்டிப்பாக, அடி கவாத்து, வாகனங்கள் வாங்க மானியம் வழங்குவதுடன், 3 லட்சம் ரூபாய் மதிப்பில், தேயிலை கொள்முதல் 'ஷெட்' அமைத்துத்தரப்படும்.

நீலகிரி மாவட்டத்தில், பெரும்பாலான நிலங்கள் கூட்டுப்பட்டாவில் உள்ளதால், சிட்டா பெறுவதில் உள்ள சிரமங்களால், தேயிலை வாரியத்திடம் இருந்து முழுமையாக மானியம் பெற முடியாத நிலை உள்ளது.

அதை தவிர்க்கும் பொருட்டு, கவாத்து உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்கு மானியம் பெறவேண்டும் எனில், விவசாயிகள் குழு அமைத்து, தோட்டத்தின் சர்வே எண் மற்றும் நிலவரி கட்டியதற்கான ரசீதை ஆவணமாக வாரியத்தில் சமர்ப்பித்தாலே மானியம் வழங்கப்படும். மாவட்டத்தின் பெரும்பாலான

பகுதிகளில், மண்ணில் அமல தன்மை அதிகரித்து, மகசூல் குறைவதாக தெரியவந்துள்ளதால், மண்ணின் தரத்தை மேம்படுத்த, 'டாலமைட்' இடுவதற்கு வாரியம் தேவையான உதவி செய்யும். சில்வர் டிப் டீ மற்றும் ஹேண்ட்மேட் டீ தயாரிக்க மாவட்டத்தில் சாத்தியம் உள்ள நிலையில், விவசாயிகள் அவ்வகை தேயிலையை தயாரித்து, கூடுதல் லாபம் பெறலாம். தரமான பசுந்தேயிலை கொள்முதல் செய்து, வினியோகிக்கும் சிறுதேயிலை விவசாயிகள் சங்கங்களுக்கு, கட்டுப்படியான விலை கிடைக்க, தேயிலை வாரியமே, தொழிற்சாலைகளை ஏற்பாடு செய்துதரும். இடுப்பொருட்களுக்கு, 15 ஆயிரம் ரூபாய் மானியம் உட்பட, வாரியத்தின், 11 வகையான மானியங்களை பெற்று விவசாயிகள் பயனடைய வேண்டும். இவ்வாறு பால்ராசு பேசினார்.

இதில், விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெள்ளி மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்க நிர்வாகி சாந்தி ராமு ஆகியோர், முன்னிலை வகித்தனர். விவசாயிகள் திரளாக பங்கேற்றனர். விவசாயி மணிகண்டன் நன்றி கூறினார்.

## விரைவில் பழநியில் திரவ உயிர்உர உற்பத்தி மையம் ரூ.16.50 லட்சம் ஒதுக்கீடு

திண்டுக்கல்:"பயிர் வளர்ச்சிக்கு இயற்கை ஊட்டமளிக்க பழநியில் திரவ உயிர் உரங்கள் உற்பத்தி மையம் அமைக்கப்பட உள்ளது' என, வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார் கூறினார். வேளாண்மைக்கு தேவையான இயற்கை வழி இடுபொருள்கள், உயிர் உரங்கள் , இயற்கை பூச்சி கொல்லி மருந்துகள் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும், விவசாயிகள் மத்தியில் இயற்கை இடுபொருள்கள், உரங்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் இல்லை.

இயற்கை உரங்களில் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, ரைசோபியம் உட்பட உயிர் உரங்கள், ட்ரைகோ டெர்மா, சூடோ@மானாஸ் போன்ற இயற்கை பூச்சிக்கொல்லிகள் விவசாய பயன்பாட்டில் உள்ளது. திடவடிவில்

உள்ள இவற்றை தற்போது திரவ வடிவத்தில் நவீன தொழில் நுட்பத்தில் தயாரிக்கின்றனர்.

திண்டுக்கல் இணை இயக்குனர் சம்பத்குமார் கூறியதாவது: உயிர் உரங்கள் தயாரிப்பில் இந்தியா முதல் இடத்தில் இருந்தாலும், விவசாயிகள் மத்தியில் இயற்கை உரங்களை பயன்படுத்துவதில் பின்தங்கி உள்ளோம்.

தற்போதுள்ள நுண்ணுயிர் உரங்களைவிட, திரவ உயிர் உரங்கள் பயன்படுத்த எளிதாக உள்ளன. எனவே அவற்றை உற்பத்தி செய்யும் மையம் பரமக்குடியில் துவக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநியிலும் திரவ உயிர் உர உற்பத்தி மையம் அமைக்க வலியுறுத்தப்பட்டது. இதனையடுத்து இம்மையத்தை அமைக்க தேசிய வேளாண் வளர்ச்சி கழகம் முதற்கட்டமாக ரூ.16 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அங்கு மையம் அமைக்கும் நடவடிக்கையில் ராமநாதபுரம் வேளாண் பொறியியல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். அடுத்த ஆண்டு இறுதிக்குள் இம்மையம் உற்பத்தியை துவங்கிவிடும்.

விவசாயிகள் திட வடிவ உரங்களை தவிர்த்து, திரவ உயிர் உரங்களை பயன்படுத்தினால் மண்ணின் தன்மை மேம்படும், நல்ல மகசூல் பெற முடியும். சொட்டு நீர்ப்பாசனம் போன்றும் பயிர்களுக்கு எளிதாக அளிக்க முடியும், என்றார்.

## பட்டுப்புழுக்கள் வளர்ப்பு குறித்து கருத்தரங்கில் யோசனை

திண்டுக்கல்:தரமான வெண்பட்டு உற்பத்தி குறித்து மத்திய பட்டு ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானி @மாகன் ஆலோசனை கூறினார்.

திண்டுக்கல்லில் நடந்த கருத்தரங்கில் அவர் கூறியதாவது: பட்டு உற்பத்தியில் சீனா முதலிடத்திலும், இந்தியா 2ம் இடத்திலும் உள்ளது. இதே போல் மாநில அளவில் கர்நாடகா முதலிடமும், தமிழ்நாடு 2ம் இடமும் வகிக்கிறது. வளமான மல்பெரி தோட்டம், பட்டுப்புழு இனங்கள், <உயரிய முறை பட்டு வளர்ப்பு தொழில்நுட்பம் ஆகியன பட்டு வளர்ச்சியில் முக்கிய காரணிகள். பட்டு

வளர்ப்பில் மண்பரிசோதனை செய்யப்பட்ட தரமான மண், மல்பெரி தோட்டம், பட்டுப்புழுக்கள் அவசியம். புழு வளர்க்கும் இடம் போதிய காற்றோட்ட வசதி, சூரிய வெளிச்சம் கொண்டதாக இருக்க வேண்டும். கிருமி நீக்கம் செய்வதற்கும், தேவையான ஈரப்பதம், வெப்பம், சுகாதாரத்தை பராமரிக்க வேண்டும். நல்ல முறையில் அமைக்கப்பட்ட வளர்ப்பு கூடத்தின் உள்ளே சென்றால் பட்டுப்புழுக்கள் மல்பெரி இலைகளை உண்ணும் சப்தம்கூட கேட்கும்.

விவசாயிகள் தங்கள் வசதிகளை பொறுத்து மல்பெரி செடிகளை நடவு செய்து, பட்டுப் புழுக்களின் தீவனமாக அவற்றை பயன்படுத்தலாம். வீட்டில் உள்ள மக்கும் குப்பைகள், காய்கறி கழிவுகளை இட்டு வந்தாலே செடிகள் நன்கு வளரும்.

விவசாயிகள் தங்கள் பட்டுப்புழு வளர்ப்பு மனையில் முறையாக கிருமி நீக்கிகளை உபயோகித்து நோய் தாக்குதலை தடுக்க வேண்டும். நோய் தாக்குதல் இல்லாத போது தான் தரமான பட்டு உற்பத்தி செய்ய முடியும். ஒரு சதுர அடிக்கு 40 முதல் 45 புழுக்கள் போதுமானது. குறைவான புழுக்களை கொண்டு தரமான வெண்பட்டு உற்பத்தி செய்வதுடன் அதிக லாபம் பெறலாம், என்றார்.

முன்னதாக உதவி இயக்குனர் ரமேஷ் வரவேற்றார். மத்திய பட்டு வாரிய ஆராய்ச்சி விரிவாக்க மைய விஞ்ஞானிகள் ஞானகுமார் டேனியல், சிவசுப்பிரமணியன் பங்கேற்றனர். அலுவலர் மணிசா நன்றி கூறினார்.

## நிலக்கடலையை தாக்கும் ""டிக்கா" இலைப்புள்ளி நோய்

திண்டுக்கல்:நிலக்கடலையை தாக்கும் ""டிக்கா" இலைப்புள்ளி நோய், தண்டு

அழுகல் நோயை தடுக்க மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி ஆலோசனை கூறியுள்ளார். அவர் கூறியதாவது: வடகிழக்கு பருவமழையை கணித்து பெரும்பாலான பகுதிகளில் நிலக்கடலை மானாவாரியாக பயிரிடப்படுகிறது. தற்போது நிலவி வரும் அதிக ஈரப்பதம் சூழ்நிலையில் நிலக்கடலையில் "டிக்கா' இலைப்புள்ளி, தண்டு அழுகல் நோய்கள்

ஏற்பட்டு மகசூலை பாதிக்கின்றன. "டிக்கா' இலைப்புள்ளி நோய்: இந்நோய் தாக்கிய இலையின் அடிப்பரப்பில் பழுப்பு நிறப்புள்ளிகளும் மேற்பரப்பில் மஞ்சள் நிறப்புள்ளிகளும் ஏற்பட்டு இலை உதிர்ந்து விடும். நிலக்கடலையின் வயது 50 முதல் 60 நாட்களில் இந்நோய் தாக்குதல் அதிகமாக இருக்கும்.

தண்டு அழுகல் நோய்: மழைக்காலங்களில் தொடர்ச்சியாக வயலில் தண்ணீர் தேங்கி நிற்கும் சூழ்நிலையில் தண்டு அழுகல் நோய் தாக்குகிறது.

நோய் தாக்குதல் இருந்தால் வெண்ணிற பூசண வித்துக்கள் செடியின் மேற்புறத்திலும், செடியின் அடிப்புறம் மஞ்சள் நிறமாக மாறி, காய்ந்தும் காணப்படும். இலைப்புள்ளி, துருநோய்க்கு மேன்கோசெப் அல்லது குளோரோதலோனில் மருந்தை ஏக்கருக்கு 400 கிராம் அளவிலும் தெளிக்க வேண்டும். கார்பண்டாசிம் மருந்தை ஏக்கருக்கு 100 கிராம் அளவில் 15 நாள் இடைவெளி விட்டு இரு முறை தெளிக்க வேண்டும். வயலில் களை அதிகம் இல்லாமலும், தண்ணீர் தேங்காத அளவிற்கு பார்த்து கொள்ள வேண்டும். ட்ரைக்கோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் புளோரசன்ஸ் என்னும் நுண்ணுயிரியை ஏக்கருக்கு 1 கிலோ என்ற அளவில் 25 கிலோ தொழு உரத்துடன் அல்லது 150 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து வயலில் தூவ வேண்டும், என்றார்.

**கால்நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடுவது ...அவசியம்:மழையால் ஏற்படும் பாதிப்பு தடுக்க வழிமுறைகள்**

தேனி:பருவமழை காலங்களில் கால்நடைகளுக்கு பல்வேறு தொற்று நோய்கள் பரவ வாய்ப்பு உள்ளது. எனவே, உரிய பராமரிப்பு செய்தால் கால்நடைகளின் உயிர் சேதம் தவிர்க்க முடியும். இதற்கான வழிமுறைகள்: கால்நடைகளின் கொட்டகையில் மழைநீர் ஒழுகாதவாறு வைத்து கொள்ள வேண்டும். கால் நடைகள் நனைத்தாலோ, தரை சகதி,சேற்றுடன் இருந்தால் உடல்நிலை பாதித்து கறவை மாடுகளுக்கு பால் உற்பத்தி குறையும். எனவே சுற்றுப்புறங்களை நீர்த்த சுண்ணாம்பு தூள், கிருமிநாசினி தெளிக்க வேண்டும்.

கால்நடைகளை தாக்க கூடிய நோய்களை அறிந்து, அவற்றை தடுக்க தடுப்பூசிபோடுவது அவசியம். வேறு பகுதியில் இருந்து புதிய கால்நடைகள் வாங்குவதை தவிர்க்க வேண்டும். தொண்டை அடைப்பான்: பாக்டீரியாவால் ஏற்படும் இந்நோய் தாக்கப்பட்ட கால்நடையின் தொண்டை பகுதி வீங்கி காய்ச்சல், மூச்சு திணறல் ஏற்பட்டு இறக்க நேரிடும். இது மற்ற கால்நடைகளுக்கும் பரவக்கூடியது. வரும் முன் தடுப்பூசி போட வேண்டும்.

சப்பை நோய்: பாதிக்கப்பட்ட கால்நடைகளின் பின்னங்கால் முதுகு, கழுத்துபகுதிகள், வீங்கி வெப்பமாகவும், வலியுடையதாகவும், கடும் காய்ச்சல் உண்டாகும். நடக்க இயலாமல் நொண்டும். சில சமயம் இறக்க நேரிடும். தடுப்பூசி போடுவது அவசியம். கோமாரி நோய்: கால்நடைகளின் காய்ச்சல் அதிகமாகி எச்சில் வடிதல், வாய்,ஈறு,நாக்கு, கால் குளம்புகளில் கொப்புளங்களும்,வாயில் புண்களும் ஏற்படும். இந்நோய் தடுக்க கன்றுகளுக்கு 4வது மாதத்திலும், ஆட்டு குட்டிகளுக்கு 2வது மாதத்திலும், வளர்ந்த கால்நடைகளுக்கு 6மாத இடைவெளியிலும் தடுப்பூசி போட வேண்டும்.

மழைகாலங்களில் கறவைமாடுகளில் மடி வீங்கி நோய் தாக்கும். பால் கறப்பதற்கு முன்பும், பின்பும், மடியை பொட்டாசியம் பெர்மாங்கனேட் கலந்த நீரில் நன்றாக கழுவி பின் உலர்ந்த துணியால் நன்றாக துடைத்து விட வேண்டும். சேமித்து வைத்த தானியங்கள், புண்ணாக்குகளில் உள்ள ஈரப்பத்தால் பூஞ்சைக்காளான் நோய் வரும். இது கால்நடைகளின் ஈரலை தாக்கி உற்பத்தி திறனை குறைப்பதோடு உயிர் சேதமும் ஏற்படுத்தும். எனவே, மக்கிபோன தீவனங்களை கொடுக்கக்கூடாது.மழை காலங்களில் பசும்புற்களை மேய்வதால் குடற்புழுக்களால் பாதிக்கும் வாய்ப்பும் உள்ளது. ரத்தசோகை, கழிச்சல் ஏற்படும். இதை தடுக்க மழைகாலத்திற்கு முன்பே குடற்புழு நீக்க மருத்து கொடுக்க வேண்டும். தகுந்த பராமரிப்பு முறைகளால் கால்நடைகளை நோய்களில் இருந்து பாதுகாக்கலாம். இத்தகவலை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை தேனி உழவர் பயிற்சி மைய பேராசிரியர் செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

மலை கிராமங்களில் கோமாரி நோய்:வருஷநாடு: கடமலை -மயிலை ஒன்றியம், முத்தலாம் பாறை ஊராட்சிக்கு உட்பட்ட தொப்பையாபுரம், கருப்பையாபுரம், தர்மலை சாஸ்தாபுரம், பசும்பொன் நகர், பேச்சியம்மான் கோவில் பட்டி உட்பட 20 க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் கடந்த சில தினங்களாக கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கி வருகிறது. இதனால் மாடுகளுக்கு வாய்ப்புண் ஏற்பட்டு இரை தின்ன முடியாமலும், பால் கறக்க முடியாமலும் சிரமப்படுகின்றன. அவற்றுக்கு சிகிச் சை அளிக்க கால்நடை துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் 140 பேருக்கு மண்வள அட்டை**




பரமக்குடி,

வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் போகலூர் ஒன்றியத்தில் 140 பேருக்கு மண்வள அட்டைகள் வழங்கப்பட்டன. மண்வளம்

நீடித்த நிலையான வேளாண்மைக்கு மண்வளத்தை உகந்த தன்மைகளுடன் நிலை நிறுத்துதல் மிக முக்கியத் தேவையாகும். இதன் அடிப்படையில் மண் வளம் பேணுதல் குறித்து பொது மக்களிடமும், விவசாயிகளிடமும், அவர்களை

ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் போகலூர் யூனியன் முத்துச்செல்லாபுரம் கிராமத்தில் மண்வள பாதுகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அன்வர்ராஜா எம்.பி. தலைமை தாங்கினார். வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சீகன்பால் வரவேற்றார். வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் முத்துச்செல்லாபுரம் கிராமத்தை சேர்ந்த 140 விவசாயிகளுக்கு மண்வள அட்டைகளை வழங்கி அதில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளின்படி உரமிட்டு மண்வளத்தை காக்க அறிவுரை வழங்கப்பட்டது. <u>செயல் விளக்கம்</u>

நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குனர் உதுமான் முகைதீன், போகலூர் வேளாண்மை உதவி இயக்குன சுருளிமலை, போகலூர் யூனியன் தலைவர் நாகநாதன், துணை தலைவர் மீனாள் பால்கரசு, மாவட்ட கவுன்சிலர் சுரேஷ், கிராம தலைவர் ஆரோக்கிய அருள்ராஜ ஆகியோர் பேசினர். ரிலையன்ஸ் அறக்கட்டளை சார்பில் கிருபா செயல்விளக்கம் அளித்தார். உதவி பேராசிரியர் சரவணன் கால்நடை மற்றும் தீவனப்புல் வளர்ப்பு குறித்து விளக்கி கூறினார்.

இதில் வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சாந்தஷீலா, ராஜமாணிக்கம், ஆரோக்கியமேரி, அருள்மொழி, கணினி உதவியாளர் நாமகிரிலட்சுமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் உதவி பேராசிரியர் ராம்குமார் நன்றி கூறினார்.

## கூட்டுறவு தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோவுக்கு ரூ.9 நிர்ணயம்



பச்சை தேயிலை பறிக்கும் பணியில் பெண் தொழிலாளர்கள்.

மஞ்சூர்,

கூட்டுறவு தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.9 நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளும், சுமார் 100-க்கும் மேற்பட்ட தனியார் தேயிலை தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் பச்சை தேயிலைக்கு மாதந்தோறும் விலை நிர்ணயிக்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் குன்னூர் இன்கோசர்வ் நிர்வாகம் மாதந்தோறும் விலை நிர்ணயம் செய்து வருகிறது. இதன்படி கடந்த நவம்பர் மாதம் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கு கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. விலை நிர்ணயம் மஞ்சூர், கைக்காட்டி ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.9 எனவும், கூடுதலாக ரூ.2 சேர்த்து ரூ.11 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. குந்தா(எடக்காடு), பிக்கட்டி தேயிலை தொழிற்சாலைகளில் ஒரு கிலோ பச்சை தேயிலைக்கு ரூ.8.50 எனவும், கூடுதலாக ரூ.2 எனவும் மொத்தம் ரூ.10.50 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இத்தலார், கிண்ணக்கொரை, மகாலிங்கா, கரும்பாலம், பந்தலூர், சாலீஸ்பரி ஆகிய பகுதிகளில் உள்ள கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ரூ.8 எனவும், கூடுதல் தொகையாக ரூ.2 என ரூ.10 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. பிதிர்காடு மேற்குநாடு, பிராண்டியார், பிதிர்காடு ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ரூ.7.50-ம் கூடுதலாக ரூ.2 என ரூ.9.50 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. எப்பநாடு கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில் ஒரு கிலோ பச்சை தேயிலை ரூ.7 எனவும், கூடுதலாக ரூ.2 என மொத்தம் ரூ.9 விலை நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. நடப்பு டிசம்பர் மாதம் கொள்முதல் செய்யப்படும் பச்சை தேயிலைக்கு கிலோவுக்கு ரூ.12.50 விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று தேயிலை வாரியம் கூட்டுறவு தேயிலை நிர்வாகங்களுக்கு உத்தரவிட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு பழையபாளையம் ஏரி நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி



சேந்தமங்கலம் அருகே 10 ஆண்டுகளுக்கு பின்பு பழையபாளையம் ஏரி நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பழைய பாளையம் ஏரி நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் தொடர் மழை பெய்தது. இதன் காரணமாக சேந்தமங்கலம் அருகே உள்ள பொம்மசமுத்திரம் ஏரி கடந்த 15 நாட்களுக்கு முன்பு நிரம்பி வழிந்தது. இந்த தண்ணீர் சோமேஸ்வரர் கோவில் ஓடை வழியாக சென்று அக்கியம்பட்டியில் உள்ள ஏரி, பாப்பாங்குளம் ஏரி, பழையபாளையம் ஏரிகள் நிரம்பின. பழையபாளையம் ஏரி கடந்த 10 ஆண்டுகளுக்கு பிறகு நிரம்பி காணப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். 500 ஏக்கர் பயன்பெறும் இந்தநிலையில் ஏரி தண்ணீரானது விளைநிலங்களிலும், நடைபாதையிலும் புகுந்துள்ளது. இதன் காரணமாக பெரிதும் அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பட்டியில் அடைக்கப்பட்டு வளர்க்கப்படும் ஆடுகள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, பரிசல் மூலமாக வளையப்பட்டி, மேய்க்கல்நாயக்கன்பட்டி போன்ற பகுதிகளுக்கு பாதுகாப்பாக ஆடு வளர்ப்பவர்கள் கொண்டு சென்றனர்.

பழையபாளையம் ஏரி கடந்த 10 ஆண்டுகளுக்கு பின்பு நிரம்பியதால் அங்குள்ள

500 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் பயன்பெறும். இதனால் அந்த பகுதியில் தற்போது விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

## ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்களை மழை வெள்ளம் சூழ்ந்தது விவசாயிகள் கவலை



கோட்டூர் பகுதியில் கதிர்வரும் நிலையில் இருந்த ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்களை மழை வெள்ளம் சூழ்ந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வெள்ளக்காடாக மாறிய வயல்கள்

காவிரி ஆற்று படுகையின் (டெல்டாவின்) கடை மடை பகுதியில் அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தின் கடைகோடி பகுதியாக கோட்டூர் பகுதி உள்ளது. காவிரி ஆற்றின் கிளை ஆறுகளான பாமணி ஆறு, முள்ளியாறு, அரிச்சந்திராநதி, அடப்பாறு, கோரையாறு, பொன்னுகொண்டான் ஆறு உள்ளிட்ட ஆறுகளில் வரும் தண்ணீரை பொறுத்தே கோட்டூர் பகுதியில் விவசாயம் நடைபெற்று வருகிறது. கோட்டூர் ஒன்றியத்தில் உள்ள கிராமங்களில் இந்த ஆண்டு கடந்த மாதம் (அக்டோபர்) சம்பா சாகுபடி பணிகள்

தொடங்கின. சம்பா பயிர்கள் இளம் பருவத்தை எட்டி இருந்த நிலையில் கடந்த மாதம் (நவம்பர்) 14-ந் தேதி முதல் தொடர்ந்து 3 நாட்களுக்கு கோட்டூர் ஒன்றியம் முழுவதும் பலத்த மழை பெய்தது. அப்போது வயல்கள் அமைந்த பகுதி வெள்ளக்காடாக மாறியது. அதைதொடர்ந்து சில நாட்கள் மிதமான அளவே மழை பெய்து வந்ததால் வயல்களில் இருந்து வெள்ளம் வடிய தொடங்கியது. இதனால் விவசாயிகள் நிம்மதி அடைந்தனர். இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக தொடர்ந்து கோட்டூர் பகுதியில் கன மழை கொட்டி தீர்த்தது. சம்பா பயிர்கள் கன மழை காரணமாக கோட்டூர் பகுதியில் உள்ள பொன்னுகொண்டான் ஆறு, கோரையாறு, அரிச்சந்திராநதி, அடப்பாறு உள்ளிட்ட ஆறுகள் நிரம்பி வழிகின்றன. அதேநேரத்தில் அன்னுகுடி, ராமநாதபுரம், குலமாணிக்கம், கீழபுழுதுகுடி, சிதம்பரகோட்டகம், தூத்திரிமூலை, அகரவயல், சோழங்கநல்லூர், ஈசனக்குடி, காடுவாகுடி, அழகிரிகோட்டகம், செல்லபிள்ளையார்கோட்டகம், காடுவாகொத்தமங்கலம், திருக்களார், மீனம்பநல்லூர், கெழுவத்தூர், மண்ணுக்குமுன்டான், கும்மட்டிதிடல், செந்தாமரைக்கண், பட்டிமார், குறிச்சி போன்ற பகுதிகளில் ஆயிரம் ஏக்கர் சம்பா பயிர்களை மழை வெள்ளம் சூழ்ந்திருக்கிறது.

விவசாயிகள் கவலை : இப்பகுதிகளில் உள்ள வயல்களில் நெற்பயிர்கள் வெளியே தெரியாத அளவுக்கு வெள்ளம் சூழ்ந்து காணப்படுகிறது. இதில் அறுவடைக்கு தயாரான 30 ஏக்கர் குறுவை பயிர்கள் அழுகி வருகின்றன.

கதிர் வரும் நேரத்தில் சம்பா பயிர்களை வெள்ளம் சூழ்ந்து இருப்பதால் கோட்டூர் பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். வயல்களில் இருந்து தண்ணீரை வெளியேற்றவும், மேலும் தண்ணீர் தேங்காத வகையில் முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஒட்டன்சத்திரம் பகுதியில் தொடர்மழை: கண்வலிக்கிழங்கு செடிகளில் பூக்கள் அழுகியது விவசாயிகள் கவலை



ஒட்டன்சத்திரம் பகுதியில் பெய்த தொடர்மழை காரணமாக கண்வலிக்கிழங்கு செடிகளில் பூக்கள் அழுகியது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கண்வலிக்கிழங்கு உற்பத்தி : திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் வசிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே நம்பி உள்ளனர். காய்கறி, மக்காச்சோள உற்பத்தியில் விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காததால் மாற்றுப்பயிராக தற்போது கண்வலிக்கிழங்கு உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

ஒட்டன்சத்திரம், கள்ளிமந்தையம், கப்பல்பட்டி, சின்னமண்டவாடி, சின்னையகவுண்டன்வலசு, தேவச்சின்னாம்பட்டி, தொப்பம்பட்டி, சின்னக்காமன்பட்டி, மார்க்கம்பட்டி, அம்பிளிக்கை, காவேரியம்மாபட்டி ஆகிய பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கண்வலிக்கிழங்கு செடிகளை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். விலை குறைவு

ஒரு ஏக்கருக்கு 1 டன் கிழங்குகளை நடவு செய்து பராமரிக்க ரூ.4 லட்சம் வரை விவசாயிகள் செலவு செய்கின்றனர். கிழங்குகளில் இருந்து செடிகள் வளர்ந்ததும் அதில் பூக்கள் பூக்கத்தொடங்குகின்றன. அவற்றை விவசாயிகள்

சீரான முறையில் ஒட்டுகட்டுகின்றனர். இதனால் 6 மாத காலத்திற்குள் நன்கு வளர்ச்சியடைந்த விதைகள் கிடைக்கிறது. இதனை ஒட்டன்சத்திரம் சந்தையில் விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு கிலோ விதைக்கு ரூ. ஆயிரத்து 860 வரை விவசாயிகளுக்கு விலை கிடைத்தது. ஆனால் தற்போது ரூ.700 வரையே விலை கிடைக்கிறது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இருந்த போதிலும் பூக்கள் உற்பத்தியை நிறுத்தாமல் தொடர்ந்து விவசாயம் செய்து வந்தனர். <u>பூக்கள் அழுகியது :</u> இந்த நிலையில் கடந்த சில வாரங்களாக ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றுவட்டார கிராமப்பகுதிகளில் தொடர்மழை பெய்தது. இதனால் ஒட்டன்சத்திரம் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த கண்வலிக்கிழங்கு செடிகள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் பூத்துக்குலுங்கிய பூக்கள் அனைத்தும் அழுகியது. இந்த ஆண்டாவது கூடுதல் விளைச்சல் கிடைக்கும், அதன் மூலம் தங்களுக்கு போதிய வருமானமும் கிடைக்கு, என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இது குறித்து ஒட்டன்சத்திரத்தை சேர்ந்த விவசாயி ஒருவரிடம் கேட்ட போது, 'தொடர்ந்து 3 ஆண்டுகள் பலன் தரும் கண்வலிக்கிழங்கு விதைகளுக்கு கடந்த சில ஆண்டுகளாக போதிய விலை கிடைக்கவில்லை. இருந்த போதிலும் விவசாயிகள் விதைகள் உற்பத்தியை நிறுத்தவில்லை. ஆனால் தற்போது பூக்கள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் அழுகிப்போனதால் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அரசு போதிய நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றார்.

## வெள்ளத்தில் சிக்கிய 6 லட்சத்து 45 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை தமிழக அரசு தகவல்

சென்னை,

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர் மாவட்டங்களில் உள்ள கால்நடைகள் மற்றும் திருவண்ணாமலை, விருதுநகர், அரியலூர், கிருஷ்ணகிரி, வேலூர், கன்னியாகுமரி, நாகப்பட்டினம், புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்ட கால்நடைகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் 4 ஆயிரத்து 768 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. அதில் 96 ஆயிரத்து 505 மாடுகள், 2 லட்சத்து 4 ஆயிரத்து 339 ஆடுகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 728 மாடுகள் மற்றும் 2 லட்சத்து 82 ஆயிரத்து 221 ஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 6 லட்சத்து 45 ஆயிரத்து 44 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. கடலூர், காஞ்சீபுரம், விழுப்புரம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள கால்நடைகளுக்கு 442.496 மெட்ரிக் டன் பசுந்தழைகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று

கால்நடைகளுக்கு 40.841 டன் தாது உப்புக்கலவை வழங்க வினியோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த 1½ லட்சம் டன் பருப்புவகைகளை கொள்முதல் செய்து இருப்பு வைக்க முடிவு மத்திய மந்திரிசபை ஒப்புதல்



புதுடெல்லி,

பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த 1½ லட்சம் டன் பருப்புவகைகளை கொள்முதல் செய்து இருப்பு வைக்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.

பருப்பு கொள்முதல் : பிரதமர் நரேந்திர மோடி தலைமையில், மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடைபெற்றது. அதில், பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த, 1½ லட்சம் டன் பருப்புவகைகளை கொள்முதல் செய்து இருப்பு வைக்க பொருளாதார விவகாரங்களுக்கான மந்திரிசபை கமிட்டி ஒப்புதல் அளித்தது. இந்த பருப்புவகைகள், சந்தை விலையில் வாங்கப்படும். நடப்பு ஆண்டிலேயே இருப்பு வைக்கப்படும். பருப்பு விலை கடுமையாக உயரும்போது இவை சந்தைக்கு அனுப்பப்படும்.

பருப்பு விலை, குறைந்தபட்ச ஆதரவு விலையை விட கீழே இறங்கினால், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கே பருப்பு வாங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும், தேவைப்பட்டால், பருப்பை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் முடிவு செய்யப்பட்டது.

தமிழக நீர்வழித்தடம் தற்போது 5 தேசிய நீர்வழித்தடங்கள் உள்ளன. இந்நிலையில், தமிழ்நாட்டில் ஒரு நீர்வழித்தடம், கேரளாவில் 3 நீர்வழித்தடம், கர்நாடகாவில் 5 நீர்வழித்தடம் உள்பட 106 நீர்வழித்தடங்கள், தேசிய நீர்வழித்தடங்களாக அறிவிக்கப்பட உள்ளன. இதற்காக தேசிய நீர்வழித்தட மசோதாவில் திருத்தங்கள் செய்வதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. இதன்மூலம், தேசிய நீர்வழித்தடங்களின் எண்ணிக்கை 111 ஆக உயரும். இந்த அறிவிப்பால், மத்திய அரசுக்கு உடனடியாக நிதிச்சுமை எதுவும் ஏற்படாது.

ரியல் எஸ்டேட் ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) மசோதாவுக்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது. இதையடுத்து, பாராளுமன்ற கூட்டத்தொடரில் இம்மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். வீடு வாங்குவோரின் நலன் கருதி, இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. வீடுகள் கட்டுமானத்தை உரிய நேரத்தில் முடித்துக் கொடுப்பதற்கும், ரியல் எஸ்டேட் பரிவர்த்தனை ஒழுங்குபடுத்த மாநிலங்கள் தோறும் ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணையம் அமைப்பதற்கும் இம்மசோதா வகைசெய்கிறது.

### தேனி அருகே கோட்டூரில் அபூர்வ வகை நல்ல பாம்புகள் பிடிபட்டன



தேனி அருகே கோட்டூரில் விவசாய தோட்டத்து கிணற்று மோட்டார் அறைக்குள் புகுந்த அபூர்வ வகை நல்ல பாம்புகள் பிடிபட்டன.

மோட்டார் அறைக்குள் பாம்புகள்

தேனி அருகே கோட்டூரில் விவசாயி ஒருவருக்கு சொந்தமான தோட்டத்து கிணற்று மோட்டார் அறைக்குள் நேற்று 2 நல்ல பாம்புகள் இருந்தன. இதனை பார்த்த விவசாயிகள் சிலர் இதுகுறித்து அதே ஊரைச் சேர்ந்த பாம்பு பிடிக்கும் வாலிபர் ரகு என்பவருக்கு தகவல் கொடுத்தனர். உடனே ரகு அங்கு வந்தார். மோட்டார் அறைக்குள் பதுங்கி இருந்த 2 பாம்புகளையும், ஒவ்வொன்றாக பிடித்தார். பிடிபட்ட பாம்புகள் சுமார் 4 அடி நீளம் கொண்டது. இந்த பாம்புகள் அபூர்வ வகையை சேர்ந்த பாம்புகள் என்பது தெரியவந்தது. சிவப்பு நிறம்

இதுகுறித்து பாம்பை பிடித்த ரகு கூறுகையில், 'நான் ஏராளமான பாம்புகளை பிடித்துள்ளேன். ஆனால், இந்த பாம்புகள் வித்தியாசமாக உள்ளன. இது அபூர்வ வகை நல்ல பாம்பு. இந்த பாம்புகள் படம் எடுக்கும் போது தலையின் பின் பகுதியில் சிவப்பு நிறத்தில் இருக்கிறது. சுற்றிலும் விவசாய பகுதி என்பதாலும், ஒரே இடத்தில் 2 பாம்புகள் பிடிபட்டுள்ளதால் மேலும் இந்த வகை பாம்புகள் இப்பகுதிகளில் இருக்க வாய்ப்புள்ளது' என்றார்.

பிடிபட்ட பாம்புகளை தர்மாபுரி பகுதியில் உள்ள கரட்டு பகுதியில் விடப்போவதாக அதனை கொண்டு சென்றார். இந்த பாம்புகள் பிடிபட்டது குறித்து தகவல் அறிந்த அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் வேடிக்கை பார்க்க குவிந்தனா.

தினகரன்

**4.72 லட்சம் டன் கோதுமை இறக்குமதி**



புதுடெல்லி: நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான முதல் 7 மாதங்களில் 4,72,192 டன் கோதுமையை வர்த்தகர்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்துள்ளனர். வெளிநாடுகளில் கோதுமை விலை குறைவு காரணமாக இந்த அளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலும் போதுமான அளவு கோதுமை இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்று மத்திய உணவுத்துறை அமைச்சர் ராம்விலாஸ் பஸ்வான் தெரிவித்தார். உள்நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கவும் இறக்குமதியை கட்டுப்படுத்தவும் கோதுமை மீதான இறக்குமதி வரி அக்டோபர் 19ம் தேதியில் இருந்து 25 உயர்த்தப்பட்டது. 2014-15 அறுவடை ஆண்டில் 88.94 மில்லியன் டன் கோதுமை அறுவடை செய்யப்பட்டது.

கறிவேப்பிலை வாங்கினால் கூட பிளாஸ்டிக் பையில் போட்டு தர வேண்டும். பிளாஸ்டிக் டம்ளரில் தான் டீ குடிப்போம்; அவற்றை அப்படியே தூக்கி எறிவோம்; பிளாஸ்டிக் பையில் பார்சலாய் குப்பைகளை கட்டி மேல்மாடியில்

இருந்து தூக்கி எறிவோம்; இந்த கழிவுகள் தான் வெள்ளம் போவதற்கு தடையாக இருந்ததற்கு ஒரு காரணம். இப்போது குப்பைமலையாய், கழிவுகளாக நம்மை பயமுறுத்துவதற்கு காரணம். அரசு இயந்திரம் பற்றி கேட்கவே வேண்டாம்; குப்பைகளை அகற்ற லாரிகள் தயாரானாலும், அதை துவக்கி வைக்க மாண்புமிகு வர வேண்டும். அதனால் தாமதம். இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் தாமதம், அலட்சியம், மெத்தனம், நமக்கென்ன என்ற அகம்பாவம் எல்லாம் சேர்ந்து தான் இன்று ஒட்டுமொத்தமாக ஏழை, பணக்காரர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஓய்வு பெற்ற அதிகாரிகள் எல்லாரும் வெள்ளத்தில் தவித்து வருகின்றனர். வெள்ளத்தில் சிக்கி இதுவரையில்லாத அளவுக்கு இழப்புகளை மக்கள் சந்தித்து விட்டனர். இனி மீண்டு நிற்போம் என்ற துணிச்சலும் அவர்களுக்கு வந்து விட்டது. புதிய விழிப்புணர்வும் அவர்களுக்கு பெரிதும் வந்து விட்டது. 'இலவசங்களுக்கும்' , பிரியாணி, கரன்சி நோட்டுக்கும் மயங்க மாட்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் துன்பங்களை அனுபவித்து விட்டனர். இந்த நிலையில், வெள்ளம் வடிந்தாலும், குப்பைகள், கழிவுகளால் அடுத்த ஆபத்து தயாராய் காத்திருக்கிறது. வெள்ளத்தில் மனிதர்கள் எத்தனை பேர் மாண்டனர் என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. வெள்ளத்தில் சிக்கி மடிந்து போன கால்நடைகள் ஏராளம். ஆடு, மாடுகள், பன்றிகள், நாய்கள், எலிகள் போன்றவற்றால் ஏற்படும் 'லெப்டோஸ்பைரோசிஸ்' (எலிக் காய்ச்சல்) என்ற தோல் மூலமான, பாக்டீரியா வழியாக வரும் நோய் மிகவும் மோசமானது.

வெள்ளத்தில் ஏராளமான எலிகள் செத்து மிதந்துள்ளன. குப்ைப, கழிவுநீரில் அவை கலந்துள்ளன. அவற்றின் சிறுநீரும் கலந்திருக்கும். இதன் மூலமான பாக்டீரியாக்கள் தான் வியாதியை ஏற்படுத்தும். காற்றின் மூலமாகவோ, தண்ணீர் மூலமாவோ, மண், கழிவுகள் மூலமாகவோ எளிதில் பரவும் சக்தி கொண்டது. இந்த எலிக்காய்ச்சல் தொற்றினால், வாய், மூக்கு, தோல் பகுதிகளில் மாற்றங்களை கண்டு கொள்ளலாம். டாக்டரிடம் காட்டாமல் விட்டால் உடல் மஞ்சள் நிறத்தில் மாறி விடும். அது தான் முற்றிய நிலை. எலிக்காய்ச்சல் போன்று டிபி போன்ற சில நோய்களும் இந்த வெள்ளத்தினால் வர வாய்ப்புண்டு. அவற்றை உடனே கண்டுபிடிக்க சாதாரண மக்களால்

முடியாது; அரசு சுகாதார அமைப்பினரால், டாக்டர்களால் தான் முடியும். ஆனால், முகாம்களில் உள்ளவர்களுக்கு போதுமான அடிப்படை வசதி இல்லாததால் இப்படிப்பட்ட நோய்கள் எளிதில் பரவ வாய்ப்புண்டு.

எந்த ஆவணமும் கேட்காமல் இப்படிப்பட்ட நோய்கள் தொற்றியவர்களுக்கு உடனே மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டும். இதில் தாமதம் கூடாது. தாமதம் காட்டினால் சில நோய்களுக்கு மருந்துகளும் ஏற்காத அளவுக்கு நிலைமை முற்றி விடும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். திறப்பு விழா, அலட்சியம், தாமதத்தை, பாரபட்சத்தை இதில் காட்டாமல், 'போர்க்கால நடவடிக்கை' என்று விளம்பரப்படுத்துவதை உருப்படியாக, உளமாற செயல்படுத்த அரசு இயந்திரங்களாக செயல்படும் அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள் முன்வர வேண்டும்.

**கனமழையில் சென்னையில் 40 துணை மின்நிலையம் அவுட்**



சென்னை: மழை வெள்ளத்தால் கிண்டி, சோழிங்கநல்லூர், தாம்பரம் கிழக்கு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள துணை மின்நிலையங்கள் முற்றிலும் சேதமடைந்தன. இதனால் இப்பகுதியில் மின்வினியோகம் கடந்த டிசம்பர் 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை தொடர்ச்சியாக நிறுத்தப்பட்டது. சில பகுதிகளில், மழை வடிந்த பின்பும் மின்வினியோகம் செய்வதில் தாமதமம் ஏற்பட்டு

வருகிறது. இதற்கு துணை மின்நிலையங்களில் ஏற்பட்டுள்ள பழுது தான் காரணம் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து மின்வாரிய உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: சென்னையில் பெய்த மழைக்கு, பெரும்பாலான துணைமின்நிலையங்கள் நீரில் மூழ்கின. இதில் சோழிங்கநல்லூர், கிண்டி, தாம்பரம் கிழக்கு உள்பட 40 துணை மின்நிலையங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளன. தற்காலிகமாக இங்கிருந்து மின்வினியோகம் செய்து வந்தாலும், இந்த துணை மின்நிலையங்ள் மூலம் நிரந்தர தீர்வு காண முடியாது. சாதாரணமாக ஒரு துணை மின்நிலையத்தில் கம்பி உள்பட மின் உபகரணங்களை மாற்ற சுமார் ரூ.1 கோடி வரை செலவாகும். தற்போது சேதாரம் அதிகரித்து உள்ளது. மேலும் 40 துணை மின்நிலையங்களுக்கும் பழுது பார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். தமிழக அரசு கூடுதல் நிதியை ஒதுக்கினால் மட்டுமே தீர்வு காணமுடியும். இல்லாத பட்சத்தில் அடுத்த ஒரு மாதத்துக்குள் பெரிய இழப்பை சந்திக்க நேரிடும் என்றார்.

**பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வரப்புகளில் பயறு வகைகளை பயிரிடலாம் வேளாண்துறை ஆலோசனை**

நெற்பயிரில் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வரப்புகளில் பயறு வகைகளை பயிரிட வேளாண்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.இது குறித்து வேளாண் அதிகாரி கூறியதாவது: நெற்பயிரில் இலைச் சுருட்டுப்புழு, தண்டு துளைப்பான், புகையான், பச்சை தத்துப்பூச்சி, ஆனைக்கொம்பன் ஈ ஆகியவை தாக்கி பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இந்த பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த பொறிவண்டு, சிலந்தி, தட்டான், நீள்கொம்பு வெட்டுக்கிளிகள் போன்ற நன்மை செய்யும் பூச்சிகள் உதவுகின்றன. இவைகள் தீமை செய்யும் பூச்சிகளை உண்கின்றன.

மேலும், நெல் பயிரிட்டுள்ள வயல்களில் உள்ள வரப்புகளில் தட்டைப்பயறு, உளுந்து ஆகியவற்றை பயிரிடலாம். இந்த பயறு வகை செடிகள்

பொறிவண்டுகளை கவர்ந்திழுக்கின்றன. அவைகள் தீமை செய்யும் பூச்சிகளை உண்பதால், நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தப்படும். இதன் மூலம் பூச்சிக்கொல்லி உபயோகத்தை குறைக்கலாம். தட்டைப்பயறு அல்லது உளுந்து விதைகளை வரப்பில் 15 செ.மீ இடைவெளிக்கு ஒன்றாக ஊன்ற வேண்டும். இதற்கு தனியாக நீர் பாய்ச்ச தேவையில்லை. நெற்பயிறுக்கு பாய்ச்சும் நீரே போதுமானது. இந்த பயிர்கள் மூலம் விவசாயிகளுக்கு விளைச்சல் கிடைத்து லாபம் அடையலாம்' என்று தெரிவித்துள்ளார்.

**விவசாய அபிவிருத்தி கடன் முகாம்**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி கனரா வங்கி கிளை சார்பில் விவசாய அபிவிருத்தி கடன் முகாம் நடைபெற்றது. வங்கி கிளை மேலாளர் பாலாஜி தலைமை வகித்தார். விவசாய பிரிவு அலுவலர் நிஷா முன்னிலை வகித்தார். சில்வார்பட்டி விவசாயிகள் நலச்சங்க பொருளாளர் முத்துக்காமாட்சி, நிர்வாகி பூரணசிவம், தேவதானப்பட்டி, மஞ்சளாறு அணை கிராமம், எருமலைநாயக்கன்பட்டி உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கிளை மேலாளர் பாலாஜி கூறுகையில், 'விவசாயிகள் தங்களது பயிர் அபிவிருத்தி கடன் மற்றும் சந்தேகங்களுக்கு கிளையை அனுகி பயன்பெறலாம்' என்றார்.

**சர்வதேச மண்வள தினம்**

சிவகாசி, :சிவகாசி அருகே சேர்வைக்காரன்பட்டி கிராமத்தில் வேளாண் துறை சார்பில் சர்வதேச மண்வள தினம் கொண்டாடப்பட்டது. ஊராட்சித் தலைவர் மெய்யன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் பத்மாவதி மண் மாதிரி எடுப்பதன் அவசியம், மண்ணின் குறைபாடுகள் கண்டறிந்து மண்ணிற்குத் தேவையான உரம் மற்றும் நுண்ணுரம் பயன்படுத்துவது குறித்து விரிவாகப் பேசினார். மேலும் பயிர்களின் நுண்சத்துக் குறைபாடுகள் பற்றி கருத்துக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்குக் காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் துணை வேளாண் அலுவலர் கனகா, உதவி வேளாண்

அலுவலர் லதா ஆகியோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் தாமரைச்செல்வி, உதவித் தொழில்நுட்ப மேலாளர் சதீஷ்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## எள், நிலக்கடலை பருப்பு விலை குறைவு

எள், நிலக்கடலை பருப்பு விலை குறைவால் நல்லெண்ணெய் மற்றும் கடலை எண்ணெய் விலை குறைந்துள்ளது. நடப்பு ஆண்டில் தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களில் எள் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால், 75 கிலோ எள் மூட்டை விலை ரூ. 8 ஆயிரத்தில் இருந்து, ரூ. 5 ஆயிரமாக படிபடியாக குறைந்தது. இதையடுத்து, நயம் நல்லெண்ணெய் 15 கிலோ டின் விலை ரூ.3 ஆயிரத்தில் இருந்து தற்போது ரூ. 2,300 ஆக குறைந்தது. இது போல், கடலைப் பருப்பு விளைச்சலும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 80 கிலோ மூட்டை கடலை பருப்பு விலை ரூ. 7ஆயிரமாக இருந்தது. தற்போது இது ரூ. 5 ஆயிரமாகக் குறைந்தது. இதனால், கடலை எண்ணெய் 15 கிலோ டின் விலை ரூ. 2500 இல் இருந்து ரூ. 2000 ஆக குறைந்தது. ராஜபாளையம எண்ணெய் ஆலை அதிபர் சுகந்தம் என்.எஸ்.ராமகிருஷ்ணன் இத்தகவலைத் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சிகள்** மேல்பாடி கிராமத்தில் கலவை ஆதிபராசக்தி வேளாண் கல்லூரி மாணவிகள் நவீன சாகுபடி தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்தனர். கலவை ஆதிபராசக்தி வேளாண் கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவிகள் ப.தீபா, சு.இளவரசி, வ.கௌரி, மு.கார்த்திகா, கவிதா, ப.பிரியா, இரா.பிரியதர்ஷினி, சூசன் ஜேக்கப் உள்ளிட்ட குழுவினர் மேல்பாடி, மாதாண்டகுப்பம் ஆகிய கிராம விவசாயிகளுக்கு சாகுபடி தொழில்நுட்பம் குறித்த பயிற்சி அளித்தனர். இதில் ஒற்றை நெல் சாகுபடி, குழித்தட்டு கரும்பு சாகுபடி, இயற்கை விவசாயம், மண் பரிசோதனை, இயற்கை உரம் தயாரித்தல், பயிர் சுழற்சி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

அளித்தனர். தொடர்ந்து புது வசூர் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருத்தரிப்பு, மருத்துவ சிகிச்சை, மருந்துகள் அளிக்கப்பட்டன. பின்னர் வேளாண் கல்லூரி மாணவிகள் சார்பில் மேல்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுடன் இணைந்து டெங்கு காய்ச்சல் தடுப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தி பொதுமக்களுக்குத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர்.

### கால்நடை சிகிச்சை முகாம்

அரக்கோணத்தை அடுத்த குருவராஜபேட்டையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கான சிகிச்சை முகாம் புதன்கிழமை நடைபெற்றது. செம்பேடு ஊராட்சிக்குள்பட்ட குருவராஜபேட்டை கிராமத்தில் நடைபெற்ற முகாமுக்கு ஊராட்சித் தலைவர் பூ.பெருமாள் தலைமை வகித்தார். குருவராஜபேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ஏ.எம்.நாகராஜன் முன்னிலை வகித்தார். முகாமை, அரக்கோணம் எம்எல்ஏ சு.ரவி தொடக்கி வைத்தார். இதில், மருத்துவர் சுமித்ரா பங்கேற்று நூற்றுக்கும் மேற்பட்ட மாடுகள், ஆடுகள், கோழிகளுக்கு சிகிச்சை அளித்தார். மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. மாவட்ட மொத்த விற்பனை பண்டக சாலை தலைவர் ராஜா, மின்னல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் ராமச்சந்திரன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் தனலட்சுமி அண்ணாமலை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### 18-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 18-ஆம் தேதி நடைபெறவுள்ளது. மாவட்ட விவசாயிகளின் குறைகளை நேரடியாக கேட்டு நிவர்த்தி செய்யும் வகையில் மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, டிசம்பர் மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 18-ஆம் தேதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் அரசின் அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகள், கோரிக்கைகளை நேரடியாக கேட்டு நிவர்த்தி செய்கின்றனர். எனவே, மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள்,

விவசாய சங்கப் பிரதிநிதிகள், பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வெள்ளிக்கிழமை (டிச.11) மாலைக்குள் மாவட்ட ஆட்சியருக்கு மனுவாக அனுப்பி வைக்கலாம். மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வேளாண் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் மனுக்களைப் போடலாம். இந்த மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைதீர் கூட்டத்தின்போது மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறுத்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்படும். மேலும், டிசம்பர் 18-ஆம் தேதி நடைபெறும் குறைதீர் கூட்டத்திலும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் நேரடியாக கலந்துகொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

### பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம்

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று மாவட்ட வருவாய் அலுவலர் சா.பழனி தெரிவித்தார்.
திருவண்ணாமலையை அடுத்த பொலக்குணம் கிராமத்தில் புதன்கிழமை சிறப்பு மனு நீதி நாள் முகாம் நடைபெற்றது. காட்டுவேளானந்தல், கலித்தேரி, பொலக்குணம் வருவாய் கிராமங்களுக்கான இந்த மனுநீதிநாள் முகாமுக்கு, வட்டாட்சியர் சி.பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். வணிகவரித் துறை ஆலோசனைக்குழு உறுப்பினர் எஸ்.தட்சிணாமூர்த்தி, ஊராட்சித் தலைவர் கே.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் சா.பழனி சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்றார். மேலும், இலவச வீட்டுப் மனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் உள்பட ரூ.2 லட்சத்து 16 ஆயிரத்து 500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சா.பழனி பேசுகையில், இந்த முகாமின் நோக்கமே பொதுமக்களைத் தேடி அரசு அலுலர்கள் செல்ல வேண்டும் என்பதுதான். பொதுமக்களின் குறைகளை மனுக்கள் மூலமாக உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் இந்த முகாம் நடத்தப்படுகிறது. எனவே, இதுபோன்ற முகாம்களை பொதுமக்கள் தவறாமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது.

விரைவில் விவசாயிகளுக்கு வெள்ள நிவாரணம் வழங்கப்படும். புதிய குடும்ப அட்டை கோரி விண்ணப்பித்த மனுதாரர்களுக்கு 60 நாள்களுக்குள் புதிய குடும்ப அட்டை வழங்கப்படும். பொலக்குணம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட விரைவில் இடம் தேர்வு செய்யப்படும் என்றார்.

முகாமில், வேளாண் உதவி இயக்குநர் அக்கண்டராவ், வட்ட வழங்கல் அலுவலர் இரா.முருகன், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் சரஸ்வதி, மண்டல துணை வட்டாட்சியர் அமுல், வருவாய் ஆய்வாளர் பொன்விழி உள்பட பலர் கலந்து கொண்டனர். செங்கம்: இதேபோல், செங்கம் அருகே உள்ள இறையூர் கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 95 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

புதுப்பாளையம் ஒன்றியத்துக்கு உள்பட்ட இறையூர், தொரப்பாடி, நரசிங்கநல்லூர் ஆகிய கிராமங்களுக்கான மனுநீதி நாள் முகாம் இறையூரில் நடைபெற்றது. முகாமுக்கு இறையூர் ஊராட்சி மன்றத் தலைவர் இறைமாணிக்கம் தலைமை வகித்தார். துயர்துடைப்பு வட்டாட்சியர் ஜெயப்பிரகாஷ், வட்ட வழங்கல் அலுவலர் பழநி, நில அளவை அலுவலர் மோகன்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டாட்சியர் காமராஜ் வரவேற்றார். மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் ஜோதி கலந்துகொண்டு, அரசின் நலத்திட்ட உதவிகளை 95 பயனாளிகளுக்கு வழங்கிப் பேசினார். மாளிகைப்பட்டு: செய்யாறை அடுத்த மாளிகைப்பட்டு கிராமத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 95 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மாளிகைப்பட்டு, மேல்கொவளைவேடு, அகத்தேரிப்பட்டு ஆகிய கிராமங்களுக்கான மனுநீதி நாள் மாளிகைப்பட்டு கிராமத்தில் இம்முகாம் நடைபெற்றது. முகாமுக்கு வட்டாட்சியர் எஸ்.ரெஹானாபேகம், சமூகப் பாதுகாப்பு வட்டாட்சியர் பி.கோபால் ஆகியோர் முன்னிலை வகிக்க, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எம்.எஸ்.பாலதண்டயுதபாணி தலைமைத் வகித்தார்.

தண்டராம்பட்டு: தண்டராம்பட்டு வட்டத்துக்கு உள்பட்ட பேராயம்பட்டில் நடைபெற்ற மனுநீதி நாள் முகாமில் 96 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

முகாமுக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பத்மினி தலைமை வகித்தார். வட்டாட்சியர் கு.ஏழுமலை, சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் சா.தனஞ்செயன், வட்ட வழங்கல் அலுவலர் மா.கோபால்,

தண்டராம்பட்டு ஒன்றியக்குழுத் தலைவர் டி.ஜானகிராமன், மாவட்ட எம்ஜிஆர் மன்றச் செயலரும், ஒன்றியக்குழு உறுப்பினருமான எஸ்.ஆர்.தருமலிங்கம், பேராயம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் து.புருஷோத்தமன், கூட்டுறவு சங்க துணைத்தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

## செம்மை நெல் சாகுபடி விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்

திருவண்ணாமலையை அடுத்த அடி அண்ணாமலை கிராமத்தில், செம்மை நெல் சாகுபடி குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. வேலூர் மாவட்டம், கலவை ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் குழு இந்த பயிற்சி முகாமை நடத்தியது. அடி அண்ணாமலை ஊராட்சித் தலைவர் வி.சீத்தாராராமன் தலைமை வகித்தார். கல்லூரி மாணவர்கள் சி.தர்மதுரை, பி.திவாகர், பி.தோம்ணிக் மனோஜ், ஏ.கார்த்திக், எஸ்.மனோஜ்குமார், பி.நரேந்திரன், ஆர்.முத்துகுமார் ஆகியோர் விவசாயிகளுக்கு செம்மை நெல் சாகுபடி பயிற்சி அளித்தனர்.

இதுதவிர, நீடித்த நவீன கரும்பு சாகுபடி, காளான் வளர்ப்பு முறை, மண்புழு உரம் தயாரிப்பு, பசுந்தாள் உரத்தின் பயன்கள், உயிர் உரங்களின் பயன்கள் குறித்து வீடியோ படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. நெல் நாற்று நடுவதற்கு முன்பாக உயிர் உரமான அசோஸ்பைரில்லத்தில் நாற்றின் வேர்ப்பகுதியை எவ்வாறு நனைத்து நடுவது என்பது குறித்தும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சி முகாமில், அடி அண்ணாமலை பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் பலர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## விவசாயிகளுக்கு வெள்ளாடு வளர்ப்புப் பயிற்சி

தருமபுரி அருகே குண்டல்பட்டி கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தில் புதன்கிழமை மாவட்ட அளவிலான வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. தருமபுரி மற்றும் பென்னாகரம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மற்றும் விரிவாக்க சீரமைப்புத் திட்டம் சார்பில் நடைபெற்ற இப் பயிற்சி முகாமை வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) பெ.பாஸ்கர் தொடக்கி வைத்துப் பேசினார்.

கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய தலைவர் அருணாசலம், வெள்ளாடுகளைத் தேர்வு செய்து வாங்கும் வழிமுறைகள் பற்றிய

தொழில்நுட்பங்களை விளக்கமாக கூறினார். உதவி பேராசிரியர்கள் மீனலோசனி மற்றும் கண்ணதாசன் ஆகியோர், வெள்ளாடுகளுக்கு கொட்டகை அமைக்கும் வழிமுறைகள், தீவன மேலாண்மை பற்றிய தொழில்நுட்பங்கள், வெள்ளாடுகளுக்கு ஏற்படும் பிரச்னைகளுக்கான தீர்வுகளை விளக்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் மகேஸ்வரி, உதவி தொழில்நுட்ப மேலாளர் பரமசிவம் மற்றும் விவசாயிகள், அட்மா திட்டப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல, பாலக்கோடு மற்றும் காரிமங்கலம் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் நடைபெற்ற பயிற்சியை வட்டார ஒருங்கிணைப்பாளர் இளங்கோவன் தலைமை வகித்து தொடக்கி வைத்தார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் மு.சிவசங்கரி, இளவரசி ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில், ஆடு வளர்ப்பின் பராமரிப்பு மற்றும் விற்பனை உத்திகள், குறைந்த செலவில் தீவனம் தயாரிப்பு ஆகியவை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. ஆடுகளுக்கு ஏற்படும் நோய் தாக்குதல் குறித்து படக் காட்சி மற்றும் கண்காட்சி காண்பிக்கப்பட்டது.

உதவித் தொழில்நுட்ப மேலாளர்கள் கோபிநாத், ரேணுகா, சேட்டு, பெரியசாமி மற்றும் 80-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### டிச.15-இல் ஜப்பானிய காடை வளர்ப்பு இலவச பயிற்சி

முட்டை மற்றும் இறைச்சி உற்பத்திக்காக, ஜப்பானியக் காடை வளர்ப்பு என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 15-ஆம் தேதி காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பயிற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: இப்பயிற்சி முகாமில் ஜப்பானியக் காடை இனங்கள், கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறைகள், இறைச்சி மற்றும் முட்டை உற்பத்திக்குத் தேவையான தீவன அளவுகள், முட்டைகளை சேகரித்து குஞ்சு பொரிக்கும் விதம், நோய்களும், அதனைத் தடுக்கும் முறைகளும் மற்றும் ஜப்பானியக் காடை உற்பத்தி பொருளாதாரம் குறித்த பயிற்சி நடத்தப்பட உள்ளது.

இப்பயிற்சி முகாமில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது 04286-

266345, 266244 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 14-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சேதமடைந்த நெற்பயிர்கள்: வேளாண் உதவி இயக்குநர் ஆய்வு

போளூரை அடுத்த பால்வார்த்துவென்றான் கிராமத்தில் மழைநீரில் மூழ்கி சேதமடைந்துள்ள நெல் பயிரிடப்பட்டுள்ள வயல்களை வேளாண் உதவி இயக்குநர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.
தமிழகத்தில் கடந்த ஒரு மாதமாக பெய்துவரும் கனமழையால் வயல்வெளிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், பெரும்பாலான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், போளூர் வட்டத்தில் பால்வார்த்துவென்றான், வடமாதிமங்கலம், ஆலம்பூண்டி என பல்வேறு கிராமங்களில் விவசாய நிலங்களில் பயிரிடப்பட்டு அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்பயிர்கள் மழைநீர் தேங்கி மூழ்கிய நிலையில், அவை தரையில் விழுந்து மீண்டும் முளைத்துள்ளன. இந்த வயல்களை போளூர் வேளாண் உதவி இயக்குநர் வடமலை தலைமையில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். இதுகுறித்து வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை கூறுகையில், இதுவரை 950-க்கும் மேற்பட்டோர் விளைநிலங்கள் பாதிப்படைந்துள்ளதாக மனு அளித்துள்ளனர். இந்த மனுக்கள் பெறப்பட்டு, அரசின் கவனத்துக்கு அனுப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகள் செல்லிடப்பேசி மூலமும் தகவல் தெரிவித்து ஆய்வுக்கு வருமாறு அழைக்கின்றனர் என்றார். அப்போது, வேளாண் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தொடர் மழையால் கத்தரிக்காய் விலை உயர்வு

தொடர் மழையால், கத்தரி செடிகளில் பூக்கள் உதிர்ந்து, காய்களின் வரத்து குறைந்துள்ளதால், கத்தரிக்காய் விலை உயர்ந்துள்ளது.
நாமக்கல் தினசரி காய்கறி சந்தையில், கடந்த மாதம் கிலோ ரூ.20-க்கு விற்பனையான கத்தரிக்காய், தற்போது கிலோ ரூ.50 வரை விற்கப்படுகிறது. வெளிச்சந்தையில் கிலோ ரூ.70 வரை விற்கப்படுகிறது. தொடர் மழை காரணமாக நாமக்கல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் கத்தரிக்காய் வரத்து குறைந்துள்ளதால் விலை உயர்ந்துள்ளதாகக்

கூறப்படுகிறது. இதுகுறித்து நாமக்கல் தினசரி சந்தை வியாபாரிகள் கூறியது, தொடர்ந்து பெய்து வரும் மழையால் கத்தரி செடிகளின் பூக்கள், பூக்கும் பருவத்திலேயே பாதிப்படைந்து உதிர்ந்து விடுகின்றன. இதனால் கத்தரிக்காய் வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. இனிமேல் வெயில் அடித்தாலும் பூக்கள் பிடிக்க காலம் ஆகும் என்பதால், வரும் நாள்களில் இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது என்றனர்.

### தேசிய வேளாண் காப்பீட்டு திட்டத்தில் நெல்லுக்கு காப்பீடு

தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் நெல் பயிருக்கு காப்பீடு செய்யலாம் என, கிருஷ்ணகிரி வேளாண் இணை இயக்குநர் சபாநடேசன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி, நோயினால் பயிருக்குச் சேதம் ஏற்படும்போதும், விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுசெய்து, வருமானத்தை உறுதி செய்வதற்காக தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழை, வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங்களால் பயிர்கள் பாதிக்கப்படும்போது, இக் காப்பீட்டுத் திட்டம் பயனுள்ளதாக அமையும். நிகழாண்டில் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், நெல் 2-ஆம் காரீப் பருவ பயிருக்கான காப்பீட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம், மாவட்டத்தில் நெல் பயிரிடும் அனைத்து விவசாயிகளும், இத் திட்டத்தில் பங்கு பெறலாம். இத் திட்டத்தில் பங்குபெற விரும்பும் பயிர்க் கடன் பெறும் சிறிய, பெரிய விவசாயிகள் காப்பீடுக் கட்டணமாக நெல் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.149-யைச் செலுத்த வேண்டும். கடன் பெறாத சிறு, மிகச் சிறு விவசாயிகள் காப்பீட்டுக் கட்டணமாக ஏக்கருக்கு ரூ. 134-யைச் செலுத்த வேண்டும். காப்பீட்டுக் கட்டணங்களை தங்களது கிராம எல்லைக்கு உள்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தலாம். பயிர் காப்பீட்டு கட்டணம் செலுத்தும் போது, தாங்கள் நெல் பயிர் சாகுபடி செய்துள்ளதற்கு ஆதாரமாக கிராம நிர்வாக அலுவலரிடம் அடங்கல் சான்று பெற்று, அதை விண்ணப்பத்துடன் இணைத்து சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் ஒப்படைக்க வேண்டும். நெல் 2-ஆம் காரீப் பருவ பயிருக்கான பயிர்

காப்பீட்டுக் கட்டணம் விவசாயிகள் பயிர் விதைத்து ஒரு மாதம் அல்லது வருகிற டிசம்பர் 15-ஆம் தேதி, இதில், எது முன்னதோ அதற்குள் செலுத்த வேண்டும். காலக்கெடுவுக்கு பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இத் திட்டமானது பரவலான பாதிப்புகளுக்கு பிர்க்கா அடிப்படையில் செயல்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் வரையறுக்கப்பட்ட பகுதியில் இத் திட்டம் செயல்படும். இழப்பீட்டுத் தொகை என்பது நெல் பயிருக்கு 3 ஆண்டு சராசரி மகசூலை அடிப்படையாகக் கொண்டு நிகழ் பருவத்தில் கிடைக்கும் மகசூலைக் கணக்கிட்டு வழங்கப்படும். குறிப்பிட்ட பகுதியில் காப்பீடு செய்யப்பட்ட பயிரின் சராசரி மகசூலைவிட நிகழ் பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ, அந்த விகிதப்படி அப் பயிரைச் சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவருக்கும் இழப்பீடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுளளது.

### சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்

அரியலூர் மாவட்டம்,ஆர்.எஸ். மாத்தூர் அருகேயுள்ள ஆலத்தியூர் கிராமத்தில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆர்.எஸ். மாத்தூர் கால்நடை மருத்துவர் தர்மராஜ் தலைமையில் நடைபெற்ற இம்மருத்துவ முகாமில் 1000-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு தொண்டை அடைப்பான்,குடற்புழு நீக்கம் உள்ளிட்ட பரிசோதனை செய்யப்பட்டு சிசிக்சை அளிக்கப்பட்டன.

### கரூரில் பரவலாக மழை

கரூரில் தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது.

மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை பெய்த மழையின் அளவு (மி.மீ.): கரூர்-1, க.பரமத்தி-1.20, குளித்தலை-2, மாயனூர்-1, கரூர்-5, அணைப்பாளையம்-2, தோகமலை-2, பஞ்சப்பட்டி-3.20, பாலவிடுதி-3.20, கடவூர்-3.40, கிருஷ்ணராயபுரம்-1, மைலம்பட்டி-3.10 என மொத்தம் 28.10 மி.மீ. மழை பெய்துள்ளது.

### உலக மண் வள தினக் கூட்டம்

உலக மண் வள தினத்தை முன்னிட்டு விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் அண்மையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் அவையைச் சேர்ந்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு நிகழாண்டை உலக மண் வள ஆண்டாக அறிவித்துள்ளது.

இதன்படி, விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் டிச.5ஆம் தேதி மண் வள தினம் கடைபிடிக்கப்பட்டது. இதில், மண் வள மேம்பாட்டில் அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், நுண்ணுயிர்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துகளின் பங்கு, மண் பரிசோதனையின் அவசியம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களை பாதுகாக்கும் முறைகள் குறித்தும் விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில், திட்ட ஒருங்கிணைப்பாளர் கண்ணன் வரவேற்றார். மண்டல ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் அனிசாராணி தலைமை வகித்தார். விருத்தாசலம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் விஜயராகவன், பேராசிரியர் பொற்கொடி உள்பட பலர் கலந்து கொண்டனர்.